[illegible]

[illegible] 7 [illegible] 12

July 1934

3L

ʒʒ211, N27 SN

N34.7.12

186941

1244

1244

M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7- SEP 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § பவ—ஆடி: 1934—ஜூலை § திங்கள் ௰உ.



| எண் | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| க. | செட்டியார்களின் செல்வாக்கு | ... | 273 |
| உ. | தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான் றோழர் | ... | 277 |
| ௩. | சிவபராக்ரமம் | ... | 286 |
| ௪. | விஷபானம் | ... | 287 |
| ௫. | சைவசமய உண்மைகள் | ... | 288 |
| ௬. | அகத்திய முனிவரைப் பற்றிய ஆராய்ச்சி | ... | 290 |
| எ. | யதார்த்தவாதி வெகுஜனவிரோதி | ... | 294 |
| அ. | தில்லைத் திருவாயிரம்: திருப்புகழ் | ... | 296 |
| ௯. | மதிப்புரை மஞ்சரி | ... | 297 |
| ௰. | இருபா விருபஃது | | (முகவுரை: 49) |
| கக. | பழமலைக் கோவை | | (65—72) |



ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**—நகர சிவாலயத்திலும், குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் ஆனி கூஉ திருமஞ்சன திருவாராதனைகளும், சஉ திருவாசக பாடசாலையில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையும் சிறப்பாக நடைபெற்றன.

**ஆத்தன்குடி-முத்துப்பட்டணம்:**-நாவுக்கரசு நற்சபையின் எட்டாவதாண்டுவிழா, சென்னை இந்தியா ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமைக்கண் ஆனி கூஉ மாலை நடைபெற்றது. சென்னை அட்வகேட் திரு. கா. இராமநாதன் செட்டியாரவர்கள் தேவாரத் திருப்பாசுரத்தின் மூலம் இறைநல இன்பத்தை இனிது விளக்கினார்கள்.

**கோழும்பு:**—ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி வெள்ளிரத மகோற்சவ அழைப்பு தனவணிக நகரத்தார்களிடமிருந்து வரப்பெற்றோம். கதிர்வேலாயுத சுவாமி இம்மாதம் யஉ சர்வாபரண அலங்கிருதராய் திவ்யதேஜோன்மயமாகிய வெள்ளிரதத்தில் ஆரோகணித்து மேளதாள விருதுகளுடன் அடியர்குழாங்கள் அரகர முழக்கம்செய்யத் திருவுலாக்கொண்டு வெள்ளவத்தை சேர்ந்து அங்கு திவ்யாலங்கார ஆலயத்தமர்ந்து அடியார்கள் செய்யும் வழிபாடுகொண்டருளி, கசஉ பலபாகங்களிலிருந்தும் வரும் பல்லாயிரக்கணக்கான பக்தகோடிகளின் ஆராதனைகளை உவந்து, கதிர்காமக் காட்சி தந்து, கஉஉ ஆங்கு கொலுவீற்றிருந்து, சகூஉ வரை நான்கு நாட்களிலும் நடைபெறும் மாகேசுவரபூசையைக்கடாக்ஷித்து, சகூஉமாலை 4 மணிக்கு சகலசம்பிரமங்களுடன் திருவோலக்கமாகத் தமது திருக்கோயில் சேர்ந்தருளுவர்.

**காரைக்குடி:**—நாகநாதபுரம் ஸ்ரீநாகநாத சுவாமி பிர்மோற்சவம் ஆனி எஉ முதல் யசுஉ வரை திருவாளர் பழ. செ. மு. முத்துக்கருப்பன்செட்டியாரவர்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது. ஐம்பெருங் கடவுளர் காலை விழா மாலைவிழாப் போந்தருளிய காட்சியும், ஆரியம் தமிழ் எனும் இருவகை மறைமுழக்கமும், அன்பர்கள் கண்டுகேட்டு இன்புற்றனர். திருநெல்வேலி திரு. சுந்தர ஓதுவார் மூர்த்தியவர்களால் வள்ளிநாயகியார் திருமண வைபவம் சங்கீதத்துடன் விளக்கப்பெற்றது. சிவபக்தி அடியார்பக்திகளிற் சிறந்த செட்டியாரவர்கட்கு மேன்மேலும் நன்மை யருள ஸ்ரீநாகநாதர் திருவருளை வேண்டுதும்.

**தீவான்பகதூர் ரூவி. பார். சிதம்பரம் செட்டியார்:**—ஆனி கூஉ தமது அறுபதாம் ஆண்டில் சிவபதம் அடைந்தார்கள். தெய்வபக்தி ராஜபக்தி பரோபகாரச் செயல் ஆதிய நிறைந்த அவர்களின் பிரிவுக்குப் பலரும் அநுதாபமுறுகின்றனர். அவர்கள் ஆன்மா புண்ணிய மூர்த்தியாகிய புனிதன் திருவடியிற் கலந்து இன்புறுவதாகுக!

**சிவநேசச் செல்வர் முத்த. வெ. வெள்ளையப்ப செட்டியார்:**--ஆனித் திங்கள் கஉஉ தமது அறுபத்தெட்டாம் ஆண்டில் பங்காள ராஜதானியில் சிவபதமடைந்தார்கள். வடமொழியும் தென்றமிழும் ஆங்கிலமும் வரன்முறையாகப் பயின்று, தேவாலய வித்தியாலய திருப்பணிகள் புரிந்து, சைவ மெய்யன்பராய்த் திகழ்ந்த அவரது ஆன்மா சிவபரம் பொருளின் திருவடியி லிரண்டறக் கலந்து இன்புறுவதாகுக!

**புதியநேர்மேன்:**—இந்நகரபரிபாலனசபைக்குத் திருவாளர் மு. ராம. பெரியணன் செட்டியாரவர்களை எல்லோரும் ஒருமித்துத் தலைவராகத் தேர்ந்துள்ளார்கள். அவர்கட்கு உள்ளூர்நகரத்தார்களால் இன்றுமாலை நாலரைமணிமுதல் ஸ்ரீமீனாட்சிசுந்தரேசர் வித்தியாசாலையில் கனம் செட்டிநாடு ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தலைமையில் ஓர்சிற்றுண்டிவிருந்து நடத்தி உபசாரப்பத்திரம் வழங்கி சங்கீதக்கச்சேரியும் நடைபெறும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - SEP 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—பவ—ஆடி | திங்கள் யஉ. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

# செட்டியார்களின் செல்வாக்கு.

வடமொழியில் சிரேட்டி என்னும் மொழி தமிழில் செட்டி எனத் திரிந்து ஆர்விகுதி சேர்ந்து செட்டியார் என வழங்குகிறது. ஆகவே, இப்பெயர் கொண்டவர்கள் மேன்மை யுடையவர்கள் என்பது பெறப்படுகின்றது. மேலும், செட்டாகப் பொருளீட்டிச் செட்டான முறையில் வாழ்க்கை நடத்துபவர்கள் என்பதும் போதரும். இதனை,

"கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நயமுரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வா ராதபடி
குறுகவே செலவுசெய்வார்
வண்டப் புரட்டர்தாம் முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் பினுமவர்
வார்த்தையிலெ லாங்கொடுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாயினும்விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள்விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிதுகாண்"

என்னும் சதகப் பாவால் கண்டு தெளியலாம்.

இப் பாவிற் கூறும் தன்மைகளைக் கையாளுந்திறனுடைய செட்டியார்களில் பல்வேறு வகுப்பினர்க ளிருக்கின்றார்க ளெனினும், அவ்வொவ்வொரு வகுப்பினர்களையும் எடுத்துக்காட்டாண்டு இடம்பெறாதாதலின், சிறப்பாகத் தனவைசிய மரபினராகிய செட்டியார்களையும் அவர்களின் செல்வாக்கையுமே எழுதத்துணிந்தேம்.

இவ் வகுப்பினர்கள் தெய்வம் போற்றி 'மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்' என்பதை முழு வுடன்பாடாகக் கொண்டு, அவர்கட்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் சொல்வழி கருத்தின்வழி நடந்து உண்மை யுடையவர்களாய்த் தீநெறிக்கட் செல்லாது செந்நெறிக்கண்ணே நிறுங்கொண்டொழுகி, வர்த்தகத் துறையிலும், பணப்பற்று வரவு புரிவதிலும், கணக்கு வரவுசெலவு செய்வதிலும், அணுவளவும் பிழையின்றி நாணயமாக நடந்துவருவது கொண்டே இவர்கள்பால் யாவரும் பெரும் நம்பிக்கையோடு வரவு செலவுகள் செய்து வந்ததன்மூலம், இருதிறத்தாரும் பேருதியம் பெறவும், இவர்கள் செல்வாக்குத் திக்கெலாம் சிறந்தோங்கவும் நேர்ந்தது. இவ் வகுப்பினர்கள் சிறிதளவோ பெரிதளவோ ஒவ்வொருவரும் கல்விபயின்றே இருப்பார்கள். பள்ளிபுகாமல் எழுதப்படிக்கத் தெரியாமல் உள்ள யாரையும் இவ் வகுப்பினருட் காண்டலரிது. அங்ஙனம் ஒருவர் இருப்பதாகக் காணப்பெறினும் இவ் வகுப்பினரால் எள்ளித் தள்ளப்பெறுவரே யன்றிக் கொள்ளப்பெறார். இவர்கள் கணக்கிற் றேர்ந்தவர்களென்பதை எத்தனையோ நீதிபதிகளும் கண்டுகொண்டிருக்கிறார்கள். கணக்குங் கையுமாக "வளவ னாயினும் அளவறிந் தழித்துண்" என்னும் முதுமொழிப்படி வருவாய்க்குத்தக்க வாழ்க்கை நடத்திவருவதாற்றான், நெடிது கொண்டு செலுத்த ஏதுவாகிறது.

"ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு" 'திரைகடலோடியுந் திரவியந் தேடு'

என்ற அருமைத்திருவாக்குகளை உரிமையாகக்கொண்டு மனைவி மக்கள் உறவினர்களையும் பிரிந்து, சுவாமி துணைபுரிவார் என்ற திடம் உடையராய்ப் பொருளீட்டும் முயற்சிமேற்கொண்டு கடல்கடந்தும், மனவடக்கம், சிறந்த வொழுக்கம், ஆடம்பர மின்மை, வரவுக்கேற்ப செலவு, மனச்சுத்தம், வாக்குச்சுத்தம், சரீரசுத்தம், இனவொற்றுமை, கட்டுப்பாடு கடவாமை ஆதியவைகளுடன் நியாயமான துறைகளில் நம்பிக்கையும் நாணயமு முள்ளவர்கள் சம்பந்தத்துடன் கொண்டுவிலை கொடுக்கல்வாங்கல்கள் செய்து பொருளீட்டி, ஈட்டிய பொருளில் சுவாமிக்கு மகிமை பகிர்ந்து, கோவில் குளம் பசுமடம் பாடசாலை அன்னசத்திரம் தண்ணீர்ப்பந்தர் திருநந்தனவனம் ஆதிய சிவதருமங்களைச் சிறப்புறச் செய்து செல்வாக் குடையவர்களாய் வாழ்ந்து வருகிறார்கள். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்றபடி, யாதாமொரு கருமமும் கடவுள் நம்பிக்கையுடன் தொடங்குவதனால் இவர்கள் காரியம்கைகூடி வருவதாகிறது. 'பிள்ளை

186941



யார் சுழி போட்டு உன் கையால் உண்மையை எழுது' என்று சொல்லக்கேட்ட இவ்வகுப்பினருள் எவரும் நடுநடுங்கி உண்மையே எழுதுவர். கணக்குக் காகிதம் எவற்றினும் 'உ: சிவமயம்' போட்டுத்தான் எழுதத்தொடங்குவது இவ் வகுப்பினரின் பரம்பரையான வழக்கம். இவ்வகுப்பினர் ஒருங்கே சிவசமயிகள். ஒன்பது நகரச்சிவாலயங்களின் பேரால் தங்குலத்தை விளக்குகின்றவர்கள். 'கோயில் விளங்கக் குடிவிளங்கும்' என்பது துணிந்து, ஒன்பது கோயில்கள் மாத்திரமன்றித் தாங்கள் வாழும் ஒவ்வோர் ஊர்களிலும், தேவாரம் பெற்ற திருவாசகம் பெற்ற திருத்தலங்களிலும், தொழிற்றுறையிற் பொருளீட்டும் ஊர்களிலும், திருக்கோயிலாதிய சிவதருமங்களும், அன்னதானங்களும் குறைவறப் புரிந்து, மார்கழிச் சட்டியில் பிள்ளையார் நோன்பும், நிரந்தரமாகக் கார்த்திகை விரதமும், தங்கள் குலவிரதமாகக் கொண்டு நோற்றும், தெய்வ வழிபாட்டிற் சிறந்தவர்களாகவும், பெரியார் வாக்கைப் பேணினவர்களாகவும், பழிபாவங்கட்குப் பயந்து இரவலர்க்கீந்தும், புரவலர்போலப் பெரும்புகழ்பெறலாயினர். 'நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்' என்ற திருவாக்கைப் பெருவாக்காகக் கொண்டு நன்மை தீமைகளிலும், மற்றெந்நாளிலும்விபூதியையேபிரதானமாகக்கொண்டும்; கல்யாணமான ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பஞ்சாக்கர உபதேசம் பெறவேண்டும் என்ற வருதியுடன் உபதேசம்பெற்று அநுட்டானங்களுடன் உருச்செபித்தும், சைவம் வளர்ப்பவர்களாகி மங்கலப்பேறு பெற்றுள்ளார்கள். இவர்கள் ஏறும் மரக்கலம் ஒரு கலக்கமுமின்றிக் கரைசேரும் என்பதை எதிர் மதத்தராகிய முகமதியர்களும், 'செட்டியேறுங் கப்பலுக்குச் செந்தூரான் துணை.' என்று புகழ்ந்து கூறுவதுண்டு. இவர்களின் நாணயச் சிறப்பை ஏனைய வகுப்பினர் 'மகா செட்டி நாணயத்தன் கெட்டுப்போனாயோ!' என்று உதாரணமாகச் சொல்லிக் கொள்வதுண்டு. இவ் வகுப்பினருள் யாராமொருவர்க்கும் பெரியோர்கள் புத்தி சொல்லும்போது, 'தம்பி! அகலக்கால் வையாதே; அகலக் கோவணம் கட்டாதே.' என்றே கூறுவர். அதுவே புத்தியென்று கொண்டு விரிவானதுறையிற் புகாமலும், ஆடம்பரமில்லாமலும் நடந்துகொள்வது வழக்கம். அங்ஙனம் ஒழுகுதலால்,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை, போகா றகலாக் கடை.'

என்ற தேவர் திருவாக்குக்கு இலக்கியமாக வருவாய் குறுகிய காலத்தும் செலவு விரிவின்மையால் செல்வாக்கு உறலானார்கள்.

யாதொரு எழுத்துமூலமுமில்லாமல் வாய் நாணயத்தாலேயே கொடுக்கல் வாங்கல்களை உண்மையோடு நடத்திவரலாயினர். கடன் சீட்டுகள் பனையோலையில் எழுதி யாதொரு இடக்கும் சொல்லாமல் வட்டிபோட்டும் வட்டிக்கு வட்டிபோட்டும் நாணயம்செலுத்திவரலாயினர். நடப்புப் பற்றுவரவுக்கு வட்டி பேசிக்கொள்ளாதபோ

னாலும், நகரத்தார்களின் நடப்புவட்டி விகிதப்படி வட்டியும் வட்டிக்கு வட்டியும் சேர்த்துக் கணக்கிட்டுக் கொடுத்து வாங்கிச் சத்தியபுத்தியுடன் நடந்துவருவாராயினர். அரசாங்கம் நிபந்தனை புரியும் வரை முத்திரையொட்டாமலே கிள்ளாக்குச் செல்வாக்கு நடத்திவரலாயினர். நடப்புப் பற்று வரவுகளுக்கும் தவணைப் பணங்களுக்கும் ஒருவர்க்கொருவர் யாதொரு எழுத்து மூலமின்றியே கொடுத்துவாங்கிவந்தார்கள். தம்மவர்களுக்குள் நேரும் வழக்குகளைப் பணச்செலவின்றித் தம்மினத்தார் முன்னிலையிற்றானே கோயில் வாசல் மடத்துவாசல்களில் தீர்த்துக் கொள்வாராயினர்.

வம்பு வழக்குகளுக்கும் நடைத்தவறுகளுக்கும் அஞ்சிநடுங்கும் இவ்வகுப்பினருள் நிறையழிந்த ஒருவன் தவணைக்குவாங்கிய பணத்தைக் கணக்கில் வரவு வையாமல் துர்விநியோகம் செய்ததிலிருந்தே தவணைப்பணங்களுக்குக் கையெழுத்துக் காகிதங்களும், அப்பால் உலக விபரீதம் காரணமாகச் சட்டப்படி முத்திரையொட்டிய அண்டிமெண்டுகளும் எழுதிவாங்கிக் கொள்ளலானார்கள். ஆயினும், நாணயத்தை உயிரினும் சிறந்ததாக ஓம்பிவந்ததனாலேதான் பொருட்பெருக்கத்துடன் செல்வாக்குடையவர்களாய் ஆங்கிலம் கற்றுப் பட்டம் பதவி பெற்ற பெரும்பெரும் மேதாவிகளாலும் போற்றத் தகுந்தவர்களானார்கள். ஓரே இடத்தில் பல செட்டியார்களின் கடைகளிருக்கவும், பலசெட்டியார்களிருக்கவும், அவர்களை முன்பின் அறியாத புறவினத்தார் வந்து, 'அங்குள்ளசெட்டியாரா? விருந்து வந்தவரா?' என்று கூடத் தெரிந்துகொள்ளாமல் ஒருசெட்டியாரை யணுகி, "ஐயா!" என்னுடைய பணத்தை வைத்திருந்து தர வேண்டும்; நீங்கள் காகிதம் தந்தால் அதை நான் பதனப்படுத்தி வைத்திருந்து கொண்டுவர முடியாது; எனைபேரால் உங்கள் கணக்கில் வரவுவைத்துக் கொண்டால் அதுவேபோதும்." என்று சொல்லிப் பணங்கொடுத்துவைத்து வாங்கிக்கொண்டார்களென்றால்—காலவரையறையுள்ள ஏனைய பாங்குகள்போலன்றி எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் கொடுத்து வாங்கி நாணயத்தை நடத்திவந்தார்களென்றால், இவர்களின் செல்வாக்கைப்பற்றி நாம் எழுதித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. தெய்வபக்தியினாலும், ராஜவிசுவாசத்தினாலும், சாதிமுறைதவறாததினாலும், நகரக்கட்டொழுங்கு கட்டுப்பாடுகளினாலும், நாணய நேர்மையினாலுமே இச் சமூகத்தார் வேறெச்சமூகத்தாரினும் சீருஞ் சிறப்பும்பெற்று புண்ணியசீலர்களென்ற புகழுடன் உலகம் மதிக்க, உலகாளரசர்மதிக்க வாழ்ந்து வருகின்றார்களென்பது ஒருதலை. இச் செட்டியார்களின் செல்வாக்கை முற்றுமெழுதவதென்றால் மிகப்பெருகும். இச் செட்டியார் வர்க்கத்தினர் ஒவ்வொருவரும், தம்குலத்துக்கு வந்த பெருமையின் வரலாற்றைத் தெரிந்து அறநெறி மறவாது வரன்முறையொழுகிச் செட்டியார்களின் செல்வாக்கு என்றும் நின்று நிலவச் செய்யத் திருவருள் துணைபுரிவதாக!

உ

## தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான்றோழர்

அல்லது

# ஏழாந் திருமுறையின் இனியபகுதி.

[நாகபட்டினம், நாஷனல் ஹைஸ்கூல், தமிழாசிரியர், வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள்.]

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் திருவருளாற் றடுத்தாட் கொள்ளப்பெற்ற தம்பிரான்றோழர் வரலாறு தமிழுலகமும், சிறப்பாகச் சைவப்பெரியாரின் திருவுள்ளமும் நிறைந்தொளிர்வதேயாம். அடியேன் மகாமகோபாத்தியாய ஐயர் அவர்களிடம் பாடங்கேட்குங் காலத்திலேயே ஏழாந்திருமுறையில் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சுயசரிதம் இடமிடங்கள்தோறும் மிளிர்தலைக்கண்டு அவற்றைத் தொகுத்து அறிய எழுதி நோக்கின் சுவாமிகளது புண்ணிய சரிதத்தை அகச்சான்று கொண்டு ஆராய்ந்ததாகும் என்ற சிற்றெண்ணம் அடியேன் மனத்து அடிக்கடி எழுந்தது. அதனை ஆசிரியர் திருவடி துணைக்கொண்டு எழுதத்துணிந்தேன்.

'நண்புடைய நன்சடைய னிசைஞானி சிறுவன் நாவலூர்க் கோன்' 'சடையனவன் சிறுவன்' எனச் சுவாமிகள் பலவிடத்தும் குறித்துக்கொள்வதால் திருநாவலூரிலே சடையனாரும் இசைஞானியாரும் செய்த முற்றவ முதிர்ச்சியாற் பெற்ற நற்றவக்குமரர் என்பது அறியப்பெறுகின்றது. அங்ஙனம் அவதரித்து வளர்ந்து வருங்காலையில் தெருவிற் சிறுதேர் உருட்டி விளையாடிய சுந்தரரை நரசிங்கமுனையரையர் அழகிலும் குணத்திலும் ஈடுபட்டுப் பெற்றோர் உத்தரவுபெற்று எடுத்துவளர்த்து வந்தனர். இது "நரசிங்க முனையரையன் ஆதரித்த ஈசனுக்கு ஆட்செயும் ஊர்" எனப்பாராட்டுதலானும், தன்னை 'நாவலூர்க்கோன்' 'கூடலார் மன்னன் குலநாவலூர்க்கோன்' என்பன போன்ற பலபகுதிகளான் கூறிக்கொள்ளுதலானும்வலியுறும். ஆரூரர் இங்ஙனம் அரசர்மனையிருந்து வளர்ந்துவருங்காலத்து உரியபருவத்தே ஆதிசைவ மரபிற் கேற்றவாறு உபநயன முதலியன செய்விக்கப்பெற்று மணப்பருவம் அடைந்தனர். அப்போது புத்தூர் சடங்கவி சிவாசாரியார் பெண்ணை மணம்புரிவிக்க எண்ணி வேண்டியன பலவுஞ் செய்து மணவினை நிகழுங் காலத்துப் பெருமான் மறையவர் திருவுருக் கொண்டு வந்து ஆவணங் காட்டி மணவினை நிகழவொட்டாது தடுத்துத் திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை யென்னும் ஆலயத்து ஆட்கொண்டார். இச் செய்தி. "அடக்கங்கொண் டாவணங் காட்டிநல் வெண்ணெயூர் ஆளுங் கொண்டார்" "வாயாடி மாமறை யோதியோர்

வேதிய னாகி வந்து...வெண்ணெய் நல்லூரில் வைத்தெனையாளுங் கொண்ட, நாயாடியார்க்கு இடமாவது நந்திரு நாவலூரே" என்பனவற்றால் விளக்கப்பெறுகின்றது. ஆட்கொள்கின்ற காலத்து வந்த மறையவரைத் தாம் பலபடியாக வைதுரைத்ததும், அவர் 'வன்றொண்டன்' எனப்பெயரிட்டதும், 'தன்மையினா லடியேனைத் தாமாட் கொண்ட நாட்சபைமுன், வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்' என நாவலூர்ப் பதிகத்து விளக்கப் பெறுகின்றது. இதில், 'அடக்கங் கொண் டாவணங்காட்டி' என்பதில், 'அடக்கங் கொண்ட ஆவணம்' எனற்பாலது பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது. நாவலூராளி நகல் ஓலையைக் கிழித்து விட்டமையால் இறைவன் மறைத்துவைத்திருந்த மூலவோலை என்பது பொருள். '........என்னைப்பெற்ற, முற்றவை தம்மனை தந்தைக்கும் தம்பிரானார்' 'எம்மான் எந்தை மூத்தப்பன் எழேழ் படிகா லெமையாண்ட, பெம்மான்' என்பனவும் மூலஓலையிற் கண்ட வாசகமாகிய 'நானும் என்வழித்தோன்றலும்வெண்ணெய்நல்லூராருக்குஅடிமை' எனஎழுதிக்கொடுத்ததன் கருத்தாகும். பிறகு, இறைவன் நம்பியாரூரரை நோக்கி, 'நீ நமக்குச் செய்யும் அருச்சனை என்னைப் பாடுதலேயாகும். ஆதலால், தமிழ் தழுவிய செய்யுள் பாடுதல் வேண்டும்.' எனப் பணித்தனர். நம்பியாரூரர் 'கண்ணுதலாய் காட்டாக்கால் காண்பாரார்? தேவரீர் பாட்டுவித்தாலன்றிப் பாடுந்தகையர் எவர்?' என்று இறைவனை வணங்கித் 'தேவரீரது எல்லையற்ற குணங்களில் எதைப்பாடுகேன்?'என்றுகூற, இறைவன் அன்புடன் இகழ்ந்த இகழ்ச்சியையும் ஏற்றுக்கொள்ளும் புகழ்ச்சி வேண்டாப் புண்ணியனாதலின், 'நீ வைத 'பித்தன்' என்றதையே தொடக்கமாகக் கொண்டு பாடுக.' எனப்பணித்தனர் அப்போது நம்பியாரூரர் 'பித்தா பிறைசூடி' யென்பதை முதலாகக் கொண்டுபாடினார். அப்பதிகத்துள் "அத்தா உனக்கு ஆளாய் இனியல்லேன் எனலாமே; ஆயா, அன்னே, அடிகேள், ஆதீ, அண்ணா, அழகா! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே" எனக் கடவுள் ஆதியாயிருப்பினும் அடிமைகொண்ட தலைவனாகவும் அன்னையாகவும் அண்ணனாகவும், ஐம்பொறிகளாலும் ஆரத்துய்க்கும் அடியனாகவும் இருந்து முறைமையாலும், இறைமையாலும், புலனுகர்ச்சியாலும் தொன்றுதொட்டே அடிமையாக்கிய அடியேன் அடிமையல்லேன் எனமறுக்கமுடியுமா? எனக்குறிப்பித்துச் செல்லுதல் எவ்வளவு சிறப்பைத் தருகின்றது!

பித்தனென்று முதற்கண் கூறிப்போந்தவர் ஞானநட்பின் மீதூர்ச்சியினால், 'மூப்பது மில்லை' யென்ற பதிகத்து 'பித்தரையொத்தொரு பெற்றியர்' என உவமை கொடுத்து விளக்கினர். பழமண்ணிப் படிக்கரைத் தேவாரத்து; '...பித்தரென்று கருதேன்மின், படிக்கரையுள் பற்றரைப் பற்றி நின்று பழிபா வங்கள் தீருமின்'



என உலகத்தவர்களை நோக்கி, 'யான் பித்தனென்று கூறியதைப் போல நீவிருங் கருதாதீர்கள். அவரருள்வழி நின்று பழி பாவங்களினின்றும் நீங்கிப் பெறக்கடவ பேற்றையடையுங்கள்' என மறுத்துங் கூறுகின்றார். திருக்குருகாவூர் தேவாரத்து 'பித்தரே என்று உம்மைப் பேசுவார் பிறரெல்லாம்' எனப்பிறர் கூற்றாகவும் அருளிச்செய்கின்றார். இவைகளை ஒற்றித்துப்பார்க்க பித்தன் என்ற நிலைக்கும், உவமங் கொடுத்தநிலைமைக்கும், மறுத்துரைத்ததற்கும், பிறர்மேல் ஏற்றிக் கூறியதற்கும் உள்ள மனநிலைவேறுபாடும் அன்புப் பெருக்காறும் ஆழ்ந்து உணரத்தக்கதாயுள்ளது.

நம்பியாரூரர்' ஆரூரற்கு ஆளாய் அல்லேன் எனலாமே' என்றதை மனத்துக் கொண்டு திருவாரூருக்கு எழுந்தருளுகின்றவர் திருவருட்டுறை, திருநாவலூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருத்துறையூருக்கு எழுந்தருளினார். அங்கு தடுத்தாட்கொண்ட பெருந்தகையை நன்குணர்ந்து அவ்வூர்ப் பெருமானை "தலைவா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே." எனத் தோய்ந்தும் தோய்வின்றி நிற்கும் தவநெறியை வேண்டிக்கொள்கின்றார். அங்கிருந்து திருவதிகையை யடைந்தார். அத்தலம் திருநாவுக்கரசர் திருத்தொண்டு பூண்ட தலமாதலின் மிதித்தற்கு அஞ்சி ஊர்ப்புறத்திலுள்ள சித்தவட மடத்திலே யெழுந்தருளி நித்திரை செய்தார். அப்போது பரமாசாரியனாகிய சிவபெருமான் மறையவர் வேடந் தாங்கி வந்து இவருக்குத் திருவடி தீக்ஷைசெய்தார். யாரோ மறையவன் இவ்வாறு செய்கின்றான் என்று பலவாறாக இகழ்ந்தார். இவ் வரலாறு, 'எம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடும் என்னும் ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன், எம்மானை யெறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோது மிகழ்வன்போ லியானே' 'ஆரூரன் மதியாது சொன்ன அன்பனை' என்ற பகுதிகளால் வலியுறும்.

பின்னர், திருமாணிகுழி முதலிய தலங்களைத் தெரிசித்துக் கொண்டு சிதம்பரத்தையடைந்தனர். அங்கு ஆனந்தக் கூத்தரைக் கண்டு, சீகாழி திருப்புன்கூர் முதலிய தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூருக்கு எழுந்தருளினர். வானவர் தானவர் யாவருக்கும் அரசனும் இனியனும் ஆகிய புற்றிடங்கொண்ட பெருமான் எழுந்தருளியிருப்பதும் இங்குத்தானே? யான் நீதிதவறாதவன்; பொருளில் மிகுந்த விருப்புடையேன்; வேதியர்தம்மை வெகுளேன். ஆனால், மிண்டருக்கு மிண்டல்லாற் பேசேன்; பேச ஆரம்பித்தால் சழக்குத்தான் பேசுவேன். ஆகையால், அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர், எனத் தன்னிடத்துள்ள குறைநிறைகளை ஒப்பக்கூறி வேண்டிக்கொண்டு வன்மீகநாதரை வணங்கினர். வன்மீகநாதர் 'உமக்குத் தோழரானோம்; மணக்கோலத்துடன்

என்றும் விளங்குவாயாக!' எனத்திருவாய் மலர்ந்தருளினர். இதனை நமது நம்பிகள் 'என்றனை ஆள் தோழனை' 'என்னுடைய தோழனுமாய்' எனக் கூறுமாற்றால் அறியலாம். இவ்வாறு நாடோறும் வழிபட்டு வருநாளையில் ஒருநாள் பண்டை விதி நடுநின்று கூட்டப் பரவையாரும் சுந்தரரும் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்தனர். பின்னர், இறைதிருவருளால் திருமணமுடிந்தது. இதனை 'மாலையோண் கண் பரவையைத்தந்து ஆண்டானை' எனத் திருவாரூர்த்தேவாரத்துக் குறிப்பிக்கின்றார். தேவாசிரிய மண்டபத்து எழுந்தருளியுள்ள அடியார்கள்மேல் நீங்காத அன்புபூண்டு இறைவன் அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத்தொகை பாடினார். சுவாமிகளுக்கு வேளாளராகிய குண்டையூர்க்கிழார் உணவுக்கு வேண்டிய உபகரணங்கள் கொடுத்துவந்தனர். ஒருபோது மழையென்னும் வாரிவளங் குன்றியதால் நிலவளஞ் சுருங்கிற்று. அவர் அடியார்க்கு உதவும் அரும்பணி இடையீடுற்றதே எனக் கவன்று இறைவனைப் பணிந்து நெல்மலை பெற்றனர். அதனைத் திருவாரூருக்குக் கொண்டுவர நம்பியாரூரர் 'கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன், ஆளிலை யெம்பெருமான் அவை யட்டித் தரப் பணி' •அல்லல் களைந்து அன்பதுவாய் இரக்கமதாய் அவையட்டித் தரப்பணி' என வேண்டிக்கொண்டார். பின்னர், அவ்வாறே சிவபெருமான் பூதங்களைக்கொண்டு எடுப்பித்தார்.

சில நாள் கழித்துச் சுந்தரர் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளியபோது கோட்புலி நாயனார் வனப்பகை சிங்கடியென்ற தனது இருபுதல்வியர்களையும் அடிமைகொண்டருளும்படி வேண்டினார். நம்பியாரூரர் தனக்கு மக்களாக ஏற்றுக்கொண்டு பல பதிகங்களில் 'வனப்பகையப்பன்; 'கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற கோடிறன் கோட்புலி சென்னி, நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி நம்பியை நாளு மறவாச், சேடார்பூங்குழற் சிங்கடி யப்பன்' 'சிலையார் வாணுதலாள் நல்ல சிங்கடியப்பன்' எனக்கோட்புலியாரையும் சேர்த்துச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பரவையார் பங்குனி உத்திரத் திருநாட் செலவிற்குப் பொன் வேண்ட நம்பியாரூரர் திருப்புகலூருக்கு எழுந்தருளிச் சுவாமி தரிசனஞ் செய்து அங்கிருந்த செங்கற்களைத் தலையணையாகக் கொண்டு நித்திரை செய்தார். அவை பொன்னாகக் கண்டு அதிசயித்துப் புலவர்களை நோக்கி, 'பொய்ம்மை யாளரைப் பாடாதே புகலூர் பாடுமின்; இம்மையே சோறும் கூறையும் தரும்; அம்மையே சிவலோகமாள்வதற்கு யாதும் ஐயுறவில்லை' என உபதேசிக்கின்றார். இறைவன் தனக்குப் பொன்னருளியதை, 'பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்' எனக் குறிப்பிக்கின்றார்.

திருவாரூரில் இருந்து சிவஸ்தலயாத்திரைக்காக எழுந்தருளி திருக்கூடலையாற்றூருக்குச் சமீபமாகத் திருமுதுகுன்றுக்குச்சென்றார்.



அப்போது இறைவன் அந்தண வேடங்கொண்டு எழுந்தருளி வழிகாட்டிச்சென்று இதோ இருக்கின்றது கூடலையாற்றூர் எனக்கூறி மறைந்தார். அதிசயித்த நம்பியார் 'அந்தணன் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே' எனக்கூறும் பாசுரம் இதனைவிளக்கும். பின்னர்த் திருமுதுகுன்றுக்கு எழுந்தருளி இறைவனைநோக்கி, 'இளைப்பறியீர் இம்மை யேத்துவோர்க்கு அம்மைச் செய்வதென்?' எனச் சினந்து கூறினர். இறைவன் பன்னீராயிரம் பொன் கொடுத்தருளினர். அதனை உரையாணி எடுத்துவைத்துக் கொண்டு மணிமுத்தா நதியில் விட்டார். திருவாரூர்க் கமலாலயத்து வந்துதேடினார். இறைவன் திருவிளையாட்டாகக் காலந்தாழ்க்கச் செய்தார். உடனே இவர் மனம்வருந்தி, 'பரவையிவள் தன்முகப்பே என்செய்த வாறடிகேள் அடியேன் இட்டளங்கெடவே' எனவும், 'பரவை யிவள் வாடுகின்றாள்' எனவும் விண்ணப்பித்துக் கொண்டு பொன்பெற்றார். இதில் வெற்றியுறுவாரும் புகழுடைவாரும் அதினின்றும் தவறநேர்ந்துழிப் பெண்கள் முன்னிலையில் பரிபவப்பட விரும்பமாட்டார்கள். அதைப் போலவே நம் பெருமானும் 'பரவையிவள் தன் முகப்பே' எனப்பரவைநாச்சியார்க்கு முன் இறைவன் செய்தவிளையாடலையும் ஆற்றாது அப்பரவையார் பரிகசித்தற்கு அஞ்சி, 'அடிகேள் என்செய்தவாறு' என இரங்கி வேண்டிக்கொள்வது எவ்வளவு அழகாயிருக்கின்றது? எடுத்த பொன்னையும் உரையாணியையும் உரைத்துப்பார்த்தார். பொன்மாற்றுக் குறைவாய் இருந்தது. கவன்று இறைவனிடம் விண்ணப்பித்து மாற்றுப்பெற்றார். இதனைத் திருவலிவலம் தேவாரத்து 'மாத்தெனக்கு வைத்தானை' என ஆரூரர் குறிக்கின்றனர்.

பிறகு, நாவலாரூரர் நள்ளாறு முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு திருக்குருகாவூர் வந்தடைந்தார். இவர் வெயிலாலும் தாகத்தாலும் வாடியிருப்பதை யறிந்து இறைவன் தண்ணீர்ப்பந்தரமைத்து வரவேற்றார். இவரும் அந்தணர் வேடங்கொண்ட அமலன் அருளிய பொதிசோற்றையும் ஏலங்கலந்த இனிய நீரையும் உண்டு இளைப்பாறினார். இறைவன் தண்ணீர்ப்பந்தரோடு தாமும் மறைந்தார். இதனை, 'பாடுவார் பசிதீர்ப்பாய்' 'வெப்பொடு பிணியெல்லாந் தவிர்த்தென்னை யாட்கொண்டாய்' 'ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை யாட்கொண்டாய்.'

எனத் தான் பசியாலும் வெப்பத்தாலும் மிகவருந்தி உயிர்போந்தருணத்தில் இருந்ததை உணர்ந்து ஆட்கொண்டமையால், இறைவனது அடியார்க் கெளியனும் பெருந்தகைமையும், பரம்பொருளையும் அன்னம் பரிமாறச்செய்யும் அடியேன் அன்புத்திறமும் இவ்வளவு சிறந்ததாயிருப்பதை யறிந்திலேன் என்ற கருத்தடங்க 'இத்தனை யாமாற்றை யறிந்திலேன் எம்பெருமான்' எனப்பாராட்டுவது நன்கு விளக்கும்.

இவ்வாறு பலதலங்களையும் வணங்கிக் கொண்டு தொண்டை நாட்டையடைந்தார். திருக்கச்சூருக்கு எழுந்தருளும்போது உண்ணும் வேளையாயிருந்தது. இறைவன் வன்றொண்டர் பசியைப் போக்க ஓரந்தணராய் அந்தணரில்லங்கடோறும் சென்று யாசித்துவந்து அறுசுவையுடன் அன்னம் படைத்தருளினர். இறைவனது பேரருளிற் பிணிப்புண்ட சுந்தரர் மலைமேல் மருந்தரிடம் மனத்தைக் கொடுத்துப் பரவசராகி, 'அடியா ரிருக்க ஐயங்கொளவ தழகிதே' 'கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக் கண்டா லடியார் கவலாரே' என அடியார்களிருக்கஆண்டான் பலிகொள்ளுதல் அழகா? அடிமையின் கடமையை ஆண்டானமேற் கொண்டதால் அடியார்கள் கவலார்களா? என்ற கருத்தடங்கக் கவன்று உரைக்கின்றார். முறையே பலதலங்களையுந் தரிசித்துக் கொண்டு திருவொற்றியூரை யடைந்தார். அங்கு வழிபாடியற்றி எழுந்தருள்காலையில் ஞாயிறுகிழார் என்னும் வேளாளரது திருமகளாராகிய சங்கிலியாரது காதற்றொடக்கால் கட்டுண்டு கவலையுற்றார். முதல்வன் முன்னின்று சங்கிலியாரைப் பிரியாதிருக்கும்படி மகிழடியிற் சபதம் செய்வித்து மணமுடித்துவைத்தார். அங்கு இல்லறம் நடத்திவருங் காலையில் தியாகராஜப் பெருமானது திருவோலக்கத் தரிசனம் ஞாபகத்திற்குவர 'எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே' 'சங்கிலியா டெனைப்புணர்த்த சழக்கனேன், எங்குலக்கப் பிறிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே' எனப் பலபடியாக ஆராமை மிக்குச் சபதத்தையும் மறந்து திருவாரூரை யடைய வழிக்கொண்டு திருவொற்றியூர் எல்லையைக் கடந்தார். அப்போது இவரது பார்வை மங்கிற்று. அப்போது இறைவனை நோக்கி, 'கட்டனேன்பிறந் தேனுனக் காளாய்க் காதற் சங்கிலி காரண மாக, எட்டி றற்றிக முந்திரு மூர்த்தி யென்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன், பெட்ட னாகிலும் திருவடி பிழையேன்' எனக்கூறுகின்றார். அங்ஙனம் கண்ணிழந்தமையால் வருந்தித் திருவொற்றியூரரை நோக்கி, 'என்கணுக்கு ஒருமருந்துரையாய்' எனவேண்டினார். அவரருளிற்றில்லை. மிகவருந்தி, 'மூன்றுகண் உடையாய் அடியேன்கண் கொள்வதே கணக்கு வழக்காகில், ஊன்றுகோ லெனக்காவ தொன்றருளாய்' எனப் பிரார்த்தித்தார். அப்போது கண்ணில்லாமையால் வரும் இழிவுகளும் துன்பங்களும் மனக்கண்முன் தோன்றின. 'அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால் அழையேல போகுருடா எனத் தரியேன்'

'வீட்டிலுள்ள பெண்கள் யான் ஏதாவது சொன்னால் அழைக்காதே போகுருடா என்பார்கள்; அதனை யான் சகியேன்' எனக் கூறுகின்றனர். மற்றும் கண்ணில்லாமை உயிரோடு நரகத்து அடைந்ததுபோலாமாதலின், 'உயிரோடு நரகத்தழுந்தாமை ஊனமுள்ளன தீர்த்தருள்செய்யாய்' எனவும் வேண்டிக்கொள்கின்றனர்.



'இறைவன் நண்பனேயாயினும் நடுவுநிலைதவறார்' ஆதலின் கண்பெற்றிலராய் மேற்போகின்றவர் திருமுல்லைவாயிலை யடைந்து, 'சங்கிலிக் காஎன் கண்கொண்ட பண்ப! நின்னடியேன் படுதுயர்களையாய்' என வேண்டிக்கொண்டு திருவெண்பாக்கத்தை யடைந்தார். அங்குந் தம்பிரையாய்த் தனக்கினிய தோழனுமாகிய இறைவன் அருளாமையால் மனங்கொதித்து 'தேவரீர் கோயிலில்தான் இருக்கின்றீரோ?' எனக் கேட்டார். அப்போது கண்மறைத்து கவிபல கொண்ட கண்ணுதற்பெருமான் மனமிரங்கி இவருக்கு ஊன்றுகோல் ஒன்று கொடுத்து, 'உள்ளோம், போம்.' என்று விடைகொடுத்தார். இதனை, 'பிழையுளன பொறுத்திடுவர்' என்றபாசுரமும், 'ஊன்றுவதோர் கோலருளி யுளோம் போகீர் என்றானே' என்றபகுதியும் விளக்குவனவாம். பின்னர்ப் பலதலங்களையுந் தரிசித்துக் காஞ்சிபுரத்தை யடைந்து இடக்கண்பெற்றார். இதனை, 'கம்பனெம் மானைக்காணக் கண்ணடியேன் பெற்றவாறே' என்ற இறுதியையுடைய பாசுரங்களால் அறியலாம். காஞ்சியைக் கடந்து 'தென்திருவாரூர்புக்கு என்றன்மனங்குளிர என்றுகொல் எய்துவதே' எனத் திருவாரூர்மேற் காதலாதரம் பெருகத் துதித்துவரும் இடையில் திருவாவடுதுறையையடைந்தார். அங்கு ஒருகண்ணில்லாமையாலும் திருமேனியிற் பரவிய நோயாலும் வருந்தி, 'கண்ணிலேனுடம்பில் அடுநோயாற் கருத்தழிந்து உனக்கே பொறையானேன்' 'மதியிலேன் உடம்பிலடுநோயான்மயங்கினேன்' எனப் பலவாறு தோத்திரித்தார். அங்கிருந்து திருத்துருத்தியை யடைந்து தன்னுடற்பிணியைப் போக்குமாறு வேண்டிக்கொண்டார். இறைவனும் அவ்வாறே தீர்த்தத்து மூழ்குவித்துப் போக்கியருளினார். இந்நிகழ்ச்சியை 'உற்றநோ யின்றே உறவொழித் தானை' எனவும், 'அம்மைநோ யிம்மையே ஆசறுத் தானை' எனவும் பாராட்டுகின்றார். பின்னர்த் திருவாரூரை யடைந்து வன்மீக நாதரை வலக்கண்ணையும் தரும்படி வேண்டினார். இச்செய்தி,

"விற்றுக் கோள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பியாட் பட்டேன்
குற்ற மொன்றும் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே."

என்றபாசுரத்தால் நன்கு விளக்கப்பெற்றுள்ளது. 'அடிமையை விற்றுக்கொள்ளும் வழக்கப்படி விற்றுவிடுவீர். ஆனால், உலகத்து மற்ற அடிமைகளைப்போல பணத்துக்கு ஒற்றியாக (ஈடாக) வைக்கப்பட்டவனல்லேன். உம்முடைய முழுமுதலாந்தன்மையைக்கண்டுவிரும்பி யடிமை பூண்டவன். அங்ஙனம் பயன்கருதாது வலியவந்த அடிமை குற்றஞ்செய்தாலும் பொறுத்துப் போதலே ஆண்டானியற்கை. அங்ஙனமிருக்கவும் நான் ஒருகுற்றமும் செய்யவில்லை. கடுந்தண்டனையாகப் பொட்டையாக்கினீர். எதற்காக எனது கண்ணைக்

கொண்டீர். வீணாக நீரே பழியை மேற்கொண்டீர். மற்றக் கண்ணையும் தராவிட்டால் அதைகனைந்து நீர்தான் வாழ்ந்துபோமே' எனத் தோழமை பற்றிக்கூறும் வனப்பு மிகச்சிறந்து விளங்குகின்றது. பிறகு இறைவன்வலக்கண்ணையும் கொடுத்தருளினார். இரண்டுகண்களும் கொடுத்ததை அவிநாசித் தேவாரத்து **'காணாத கண்கள் காட்டவல்ல கறைக்கண்டனே'** எனப் பாராட்டுகின்றார்.

இவ்வாறு இறைவனை அத்தயாமத்துத் தொழுது பரவையார் இல்லத்திற்கேக அவர் சங்கிலியாரை மணந்த காரணத்தினால் இவரை ஏற்றுக் கொள்ளாது மறுத்தார். அப்போது இவர் வேண்டுகோளின்படி இறைவனே தூது சென்று இருவர் ஊடலையும் தவிர்த்தனர். இதனை **'தூசுடைய வகலல்குல் தூமொழியாள் ஊடல் தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து'** என்ற திருநாகைக் காரோணபதிகத்தால் அறியலாம். திருவாரூரில் வாழ்ந்துவரு நாளையில் ஏயர்கோன் கலிக்காமநாயனார் இறைவனைத் தூதனுப்பியதைக் கேள்வியுற்று அளவிலாக் கோபங் கொண்டிருந்தார். இருவரையும் ஒன்றுபடுத்தக் கருதிய இறைவன் ஏயர்கோனுக்குச் சூலைநோய் வரும்படிச்செய்து நம்பியாரூரரை நீக்கும்படி ஏவினர். நாவலாரூரர் வருதலைக் கேட்ட ஏயர்கோன் வயிற்றைக் கீறிக்கொண்டு உயிர் துறந்தார். இவரும் துறக்க எண்ணியபோது இறைவன் திருவருளால் ஏயர்கோன் உயிர்பெற்று எழுந்தார். இருவரும் நட்புக் கொண்டனர். இதனை, **'ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்து'** என்னும் பகுதி விளக்குகின்றது.

பிறகு, சேரமான்பெருமாணாயனாரோடு நட்புக்கொண்டு திருநாகைமுதலிய தலங்களுக்குச் சென்று வணங்கித் திருநாகையில் இறைவனைக் கத்தூரி, சாந்து, குதிரை, பன்னீராயிரத்தில் மூன்றிலொருபங்குபொன் இவற்றைவேண்டினார். பின்னர், பாண்டியநாட்டுத்தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருச்சுழியல் வந்து தங்கியிருந்தபோது இறைவன் கனவின்கட் காளையாக் காட்சி கொடுத்தார். கானப்பேர் பதிகத்து **'கானப்பேருறைகாளை'** என இவர் கூறுவதால் விளங்கும். திருப்புனவாயில் முதலான தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூருக்கு எழுந்தருளினார். அங்கிருந்து சேரமானோடு திருவையாற்றைத் தரிசிக்க எழுந்தருளினார். அங்குகாவிரியில் பெருக்கு அதிமாக இருந்தது. **'எதிர்த்து நீந்தமாட்டேன் நான்'** என விண்ணப்பித்துக்கொண்டதால் ஆறு வழிவிட்டது. இறைவனை வணங்கி சேரமானோடுசேரநாட்டுக்கு எழுந்தருளினர். சேரனோடு நட்புக் கொண்டமையால் **'சேரமான் றோழர்'** என்ற நாமமும் உண்டாயிற்று. அங்குச் சிலநாள் தங்கியிருக்க **'செல்வஆரூரானை மறக்கலுமாமே'** என்று தியாகேசன் எண்ணம் மனத்துதிக்கத் திருவாரூருக்கு வழிக்கொண்டார். சேரர்பெருமான் அன்றுவரைதன் பண்டாரத்திருந்த பொருள்களைத் தூதர்களைக்கொண்டு எடுப்பித்து



உடன்போகச் செய்தார். இவர் திருமுருகன்பூண்டிக்குப் பக்கமாகச்செல்லும்போது இறைவன் தோழனிடமிருந்து வசை பெறுவதற்காகவோ, அல்லது கொடுப்பதற்கு நாமிருக்க நந்தோழன் பிறரொருவரிடம் வாங்கலாமோ என்ற எண்ணத்தினாலோ, தம்பூதங்களை வேட வடிவு கொள்ளச்செய்து பிடுங்கிவரச் யெய்தார்- இந்நிகழ்ச்சியை,

'வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லி
கல்லினால் எறிந்திட்டும் மோதியும் கூறை கொளுமிடம்'

எனப் பலவாறு விளக்கியுள்ளார். பிறகு, திருவருளால் இழந்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு திருவாரூரை யடைந்தனர். சில நாள் தங்கியிருந்து கொங்குநாட்டு சிவதலங்களைத் தரிசிக்கச் சென்றார். திருப்புக்கொளியூரிற் செல்லும்போது முதலைவாயிற் பிள்ளையைப் பறிகொடுத்த வேதியர்க்கிரங்கி மீட்டுக்கொடுத்தார் என்பது,

'புக்கொளி யூரில் குளத்திடை,
உள்ளாடப் புக்க மாணி என்னைக் கிறிசெய்ததே'
'கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே'

என்ற பகுதிகளான் விளக்கப்பெறுகின்றது. பின்னர் சேரநாடு சென்று சேரமான் பெருமானோடு எழுந்தருளியிருக்கும்போது திருவஞ்சைக் களத்திற்கு எழுந்தருளினர். அஞ்சைக்களத் தப்பரைநோக்கி, **'வெறுத்தேன்மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்'** என்றும், **'ஆக்கும் அழிவும் அமைவும் நீ யென்பனான், நாக்கும் செவியும் கண்ணு நீ யென்பனான்' 'நலனே இனிநான் உனைநன் குணர்ந்தேன்'** என்றும் வேண்டிக்கொண்டனர். உடனே இறைவன் வெள்ளையானையை யனுப்பி அணுக்கத்தில் அழைத்துவரச் செய்தனர். திருக்கைலாயத்துத் தேவர்கள் எதிர் கொண்டனர். இவ் வரலாறு,

' இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவனார் என்ன எம்பெருமான்
நந்தம ரூரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே.''

என்பன போன்ற பாசுரங்களால் இனிது விளக்கப்பெறுகின்றது. பக்கத்து நின்றமுனிவர்கள் இறைவன் திருமுகச் செவ்விபார்த்து இவர் யாரென்று கேட்கத் தொன்றுதொட்ட அடிமையைப் பாராட்டும் உரிமையைக்காட்ட **'நந்தம் ஆரூரன்'** என்று திருவாய்மலர்ந்தமை எவ்வளவு பொருளைக் காட்டுகின்றது!

இனி, இலக்கியச் சுவை நுகரும் புலனுணர்ச்சிகொண்டு இதனை ஆராயுமிடத்துத் திருப்பாடலியல்பும், நட்பின்திறமும். அன்பர் வரலாறுகளும், இயற்கையின் எழிலும், சாத்திரக் கருத்துக்களும், துறை தழுவிய பாசுரங்களும், சொற்றொடர் நயமும், அரும்பிரயோகங்களும் அழகு செய்கின்றன. அல்லாமலும் பிறநூல்களிற் காணப்பெறும் இவரது சரித விசேடங்களும், திருக்கடைக்காப்பினமைதியும், பிறவும் விளங்குகின்றன. அவற்றைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

---

# சிவபராக்ரமம்.

(ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுகிறார்)

[ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாசாசாரியாரவர்கள் மொழிபெயர்த்தசௌப்திக பர்வம் 17-18-வது அத்தியாயங்களின் திரட்டு.]

சிவபரத்துவ நிரூபணசிகாமணி
பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்.

"அசுவத்தாமா தேவதேவர்களின் ஈசுவரனுக்கும் ஈசுவரரும் குறைவற்றவருமான மகாதேவரைச் சரணமடைந்தார்; இது நிச்சயம். அதனால், துரௌணியானவர் ஒருவராயிருந்துகொண்டு அநேகரைக் கொன்றார். மகாதேவர் பிரசன்னராவாராகில் மரணமில்லாமையையும் அளிப்பார். இந்திரனையும் நாசம் செய்யத்தக்க வீரியத்தையும் அவர் அளிப்பார். நான் உள்ளபடி மகாதேவரை அறிகிறேன். புராதனமாகவும் பற்பலவிதமாகவுமுள்ள இவருடைய செய்கைகளையும் அறிகிறேன். தேவர்கள் யாகம் செய்வதற்கு சங்கல்பித்தார்கள். அந்தத் தேவதைகள் ருத்திரரை உள்ளபடி அறியாமல் தேவரும்ஸ்தாணுவுமான அவருக்குப்பாகத்தை ஏற்படுத்தவில்லை. யாகத்தில் தேவர்களால் பாகமானது ஏற்படுத்தப்படாமலிருக்கவே, கோபமுள்ள மகாதேவர் தேவர்கள் யாகம் செய்தவிடத்திற்கே வந்தார். அந்தச் சிவபிரானைக் கண்டு பூதேவியானவள்பயந்தாள்; மலைகளும் நடுங்கின; காற்றும் வீசவில்லை; மூட்டப்பட்ட அக்னியும் ஜ்வலிக்கவில்லை; நக்ஷத்திரமண்டலமானது பயமடைந்து அதிகமாகச்சுற்றியது; சூரியனும் பிரகாசிக்கவில்லை; சந்திரன் ஒளியையிழந்த மண்டலத்தையுடையவனானான்; ஆகாயமுழுதும் இருள்சூழ்ந்ததும் மூடப்பட்டதும் ஆகியது. பிறகு, அவமதிக்கப்பட்ட தேவர்கள் விஷயங்களை அறியவில்லை. அந்த யஜ்ஞமானது பிரகாசிக்கவில்லை. தேவதைகள் அவ்வாறு பயந்தார்கள். பிறகு, அவர் பயங்கரமான பாணத்தினால் யஜ்ஞத்தை மார்பில் அடித்தார். பிறகு, யஜ்ஞமானது மிருகமாக ஆகி அக்னியுடன் கூடி ஓடியது. ருத்திரரால் ஆகாயத்தில் பின்தொடரப்படுகின்றதான அந்த யஜ்ஞமிருகமானது அந்தரூபத்துடனேயே ஆகாயத்திலிருந்துகொண்டு விசேஷித்துப் பிரகாசித்தது. பிறகு, யஜ்ஞம் ஓடிவிடவே, தேவர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தேவர்கள் நினைவு தவறவே ஒன்றும் அறியப்படவில்லை. கோபங்கொண்ட முக்கண்ணர் சவிதாவினுடைய இருகைகளையும்பகனுடைய இருகண்களையும் பூஷாவினுடைய பற்களையும் வில்லின் நுனியினால் அடித்து நாசஞ்செய்தார். பிறகு, தேவர்கள் வேகத்துடன் ஓடினார்கள். யஜ்ஞாங்கங்களும் நான்கு பக்கங்களிலும் ஓடின. சிலர் அங்கேயே சுழன்றுகொண்டு உயிரை இழந்தவர்கள்போலானார்கள். பிறகு, தேவர்கள் தேவசிரேஷ்டரை யஜ்ஞத்துடன்கூடச் சரணமடைந்தார்கள். பிரபுவும் அருள்புரிந்தார். பிரசன்னரான பகவான் சமுத்திரத்தில் கோபத்தை விட்டார். அந்தக்கோபமானது நெருப்பாகி எப்பொழுதும் ஜலத்தை வற்றச் செய்கிறது. பகவான் சங்கரர் பகனுக்கு இருகண்களையும் அவ்வாறே சவிதாவுக்கு இருகைகளையும் பூஷாவுக்குப் பற்களையும் கொடுத்து மீண்டும் யஜ்ஞங்களையும் கொடுத்தார். பிறகு, இவையனைத்தும் மறுபடியுமே நல்லநிலைமையை அடைந்தன. தேவர்கள் இவருக்கு எல்லா ஹவிசுகளையும் பாகமாக ஏற்படுத்தினார்கள். அவர் கோபித்தவுடனே உலகனைத்தும் நல்லநிலைமையை இழந்ததாகியது. அவர் பிரசன்னராகவே, உலகம் மீண்டும் நல்லநிலைமையை அடைந்தது. அந்த மகாதேவரால் உம்முடைய புத்திரர்களனைவரும் கொல்லப்பட்டார்கள். அது துரோண புத்திரரால் செய்யப்பட்டதன்று. அது மகாதேவருடைய அருள்."



---

# விஷபானம்.

[ஸ்ரீ உபய. வே. தி. ஈ. ஸ்ரீநிவாசாசாரியாரவர்கள் மொழிபெயர்த்த ஆதிபர்வம் 18-வது அத்தியாயத்திற் கண்டது.]

"தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்திற்காக சமுத்திரத்தைக் கடையத்தொடங்கினர். வாசுகியின் முகத்தை அசுரசிரேஷ்டர்கள் பிடித்துக்கொண்டனர். நாராயணர் எங்கே இருந்தாரோ அந்தவாலின் பக்கத்தில் தேவர்களெல்லோரும் சேர்ந்து நின்றனர். அசுரர்கள் வேகமாகப் போட்டபடியால் வாசுகி கக்கினவிஷத்தோடு அந்த ஜலம் சேர்ந்து போயிற்று. பின்பு, ஆலாகலமென்று பெயர்பெற்ற கொடிய விஷம் உண்டாயிற்று. தேவர்களும் அசுரர்களும் விஷத்தால் தகிக்கப்பட்டு, பயந்து விசனமடைந்து அவ்விடம்விட்டோடினர். தேவர்களும் ரிஷிசிரேஷ்டர்களும் பிரமாவினிடம் போய், 'அமிர்தம் கடையும்போது பிரளயகாலாக்னிக்கு ஒப்பான விஷம் உண்டாயிருக்கிறது; அதனாலேயே, உலகங்கள் தகிக்கப்படுகின்றன; அதற்கு நீங்கள் பரிகாரஞ்செய்யவேண்டும்.' என்றனர். பிரம்மா லோகேசுவரரும், ஹரரும், மூன்றுநேத்திரங்களுடையவரும், திரிசூலந்தரித்தவரும் தேவர்களுக்குந் தேவரும்,' பார்வதீ பதியுமாகிய உருத்திர மூர்த்தியைத் தியானம் செய்தார். அவராற் சிந்திக்கப்பட்ட ஈசுவரர் அவர் சிந்தித்ததையறிந்து சீக்கிரம் வந்தனர். பிரம்மதேவர் அதையெல்லாம் அந்த ஈசுவரருக்குச் சொல்ல, அதைக்கேட்டு உருத்திரமூர்த்தி உலகங்களுக்கு இதஞ்செய்யக்கருதிப் பிரளயகாலாக்கினிக் கொப்பான தேசசோடுகூடிய அந்தவிஷத்தைப் பானஞ்செய்தார். ஈசுவரர், லோக இதத்திற்காக அந்தவிஷத்தைத் தம் கழுத்தினுள் நிறுத்தினர். அதனால், கழுத்திற் கருமையுண்டானது பற்றி அவர் நீலகண்டரென்று சொல்லப்படுகிறார். அளவற்ற தேஜசுள்ள உருத்திரராலே விஷம் குடிக்கப்பட்ட மாத்திரத்தில் தேவர்கள் சந்தோஷமடைந்து திரும்பவும் சமுத்திரத்தைக் கடைந்தனர்."

---

உ

# சைவசமய உண்மைகள்.

1. கடவுளும், உயிர்களும், உயிரறிவை மறைத்து நிற்கும் தடைப் பொருள்களும் என்றும் உள்ளன. (கடவுள்-பதி, உயிர்கள்-பசு, தடைப் பொருள்-பாசம்.)

2. கடவுள் சிவபெருமான் ஒருவரே. அவர் எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமும் இயல்பாகவுடைய அதிபரிசுத்தர்.

3. உயிர்கள் எண்ணிறந்தன. அவ்வுயிர்கள் பலவேறு வகைப்பட்ட சிற்றறிவும், பரதந்திரமும், கடவுள் அனுக்கிரகமின்றி அமையாமையும் இயல்பாகவுடையனவாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பன.

4. உயிரறிவை மறைத்து நிற்கும் தடைப்பொருள்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றுமாம். அவற்றுள் ஆணவம் நெல்லில் உமி போன்றும் செம்பிற் களிம்புபோன்றும் உயிரின் குற்றமாய் உடன்தோன்றி நிற்பது. இருள் ஒன்றேயாயினும் பலகண்களையும் மறைத்து நிற்பதுபோல ஆணவம் ஒன்றேயாயினும் பலஉயிர்களின் அறிவையும் மறைத்துநிற்கும். கன்மம், உயிர்கள் தானென்னும் முனைப்போடு மனம் வாக்குக் காயமென்னும் மூன்றானும் செய்யும் தொழில். மாயை, ஆடையிற்படிந்த அழுக்கை நீக்குதற்கு ஆடையிற் செறிக்கப்படும் உவர்போல, உயிரிற் படிந்த ஆணவத் தடை நீக்குதற்கு உயிரிற் செறிக்கப்பட்டது.

5. சிவபெருமான் அநாதியே ஆணவத்திலே அழுந்திக்கிடந்த உயிர்கள்மேல்வைத்தபெருங்கருணையாலேசிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் ஐந்து தொழில்களையும் செய்தருளுவர். அவற்றுள் சிருஷ்டியென்பது உயிர்கட்கு அவற்றின் கர்மத்துக்கு ஏற்பமாயையிலிருந்துசரீரம் உலகம் முதலியவற்றை உண்டாக்கிக் கொடுத்தல். திதியென்பது அங்ஙனம் உண்டாக்கப்பட்ட சரீரம் உலகம் முதலியவற்றை பாதுகாத்தல். சங்காரமென்பது அச்சரீரம் உலகம் முதலியவற்றை மாயையில் ஒடுக்குதல். திரோபவமென்பது உயிர்கள் தாம் செய்த வினைப்பயன்களை அனுபவிக்கும்படி செய்தல். இது திதி நிகழும்போது நடைபெறுவது. அனுக்கிரகமென்பது உயிர்களுக்கு ஆணவம் கன்மம் மாயை யென்னும் மூன்றுதடைகளையும் நீக்கிப் பேரின்பம் கொடுத்தல். இது சங்காரம் நிகழும்போது நடைபெறுவது.

6. உயிர்கள் தமக்குக்கிடைத்த சரீரத்தின் உதவியால் இவ்வுலகத்திலே நல்வினை தீவினைகளைச்செய்யும். இவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களை முறையே சுவர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவிக்கும். பின்னர் மறுபடியும் அவைகர்மத்திற்கேற்ப இவ்வுலகிற் பல பிறவிகளிற் பிறக்கும். இங்ஙனம் உயிர்கள் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும்வரும் உயிர்களுக்குக் கிடைக்கும் பிறவிகள் பலவற்றுள்ளும், மக்கட் பிறப்பே முத்தியின்பம் பெறுதற்குக் கருவியாதலால் மிகச்சிறந்தது.

7. மனிதப் பிறப்புப் பெற்றவர்கள் முன் பல பிறவிகளையெய்தினமை காரணமாகச் சிறிதுசிறிது அறிவுவிளக்கம் பெற்றுப் படிப்படியாகப் பலவேறுவகைப்பட்ட மதங்களிலே நின்று அவ்வவ் நூல்களில் விதித்தபடி



ஒழுகுவர். அவ்வாறு ஒழுகிய புண்ணியவிசேடத்தால் மேலான சைவசமயத்திற் புகுந்து வேதசிவாகமங்களில் விதித்தபடி ஒழுகுவர்.

8. வேத சிவாகமங்களிலே விதிக்கப்பட்ட சாதனங்கள் சரியை கிரியை யோகம் ஞானமென நான்காம். அவற்றுள் சரியை ஒழுக்கநெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தால் வழிபடுதல். கிரியையாவது ஒழுக்கநெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தாலும் மனத்தாலும் வழிபடுதல். யோகமாவது ஒழுக்கநெறியிலேநின்று சிவபெருமானை மனத்தால் வழிபடுதல். ஞானமாவது சிவபெருமானை அறிவால் வழிபடுதல்.

9. சரியை கிரியை யோக நிலைகளிலே நின்று சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தலே சிவபுண்ணியமாம். இச்சிவபுண்ணியத்தால் யான் இன்ன நல்வினை செய்தேன்; எனக்குஇன்னார் தீவினை செய்தார் என்னும் நினைப்புநீங்குதலாகிய இருவினைச் சமபுத்தியுண்டாகும். இச் சமபுத்தியால் அகங்காரம்கெட ஆணவ அழுக்குநீங்கும். பருவம் வரும். அப்பருவத்தில் சிவபெருமானுடைய திருவருள் ஆன்மாவினிடம் விசேஷமாகப் பதியும். அச்சமயம் சிவபெருமானே குருவாக எழுந்தருளிவந்து ஞானோபதேசம் செய்வர்.

10. அவ்வாறு ஞானோபதேசம் பெற்ற உயிர் அவ் வுபதேசநெறியை உறுதியாகக்கொண்டு சிவபெருமானைத் தன்னுள்ளே சிவோகம் பாவனை செய்து நாடும். அங்ஙனம் நாடிய காலத்து மாயாகாரியமாகிய உலகப்பொருள் முதலியவற்றின் நிலையாமைகண்டு உயிர் அவற்றினின்று நீங்கவே, அவ்வுயிர்க்குச் சிவபெருமானுடைய ஞானசொரூபம் விளங்கும். இவ்விதஞானசொரூப விளக்கம் நிலைபெறுதற்கு வேண்டப்படுவன சிவாலயத்தையும் சிவனடியார்களையும் சிவனெனவே கண்டு வழிபடுதலும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைவிதிப்படி உச்சரித்தலுமாம்.

11. ஞானசொரூப விளக்கம் நிலைபெற்ற உயிர், முன் பாசத்தோடு கட்டுண்ட காலத்துச் சிவபெருமானை வேறுகாணாதுநின்ற நிலைபோல இப்பொழுது தன்னை வேறுகாணாது சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவரருளாலல்லது ஒன்றையும் செய்யாது நிற்கும். அவ்வாறு நிற்கும் உயிர் சிவபெருமான் தன்னோடு அநாதியே இரண்டறக்கலந்துநின்று கருணையால் உபகரித்து வரும் உரிமையை நோக்கி நோக்கி அப்பெருமானிடத்துப் பேரன்பு முறுகிவளரப்பெறும். இதுவே ஞானத்தின் முடிவான நிலை.

12. இவ்வித ஞானநிலை அடைந்தவர்களே சிவஞானிகள். அவர்களிடம் ஆணவம் வறுத்த வித்துப்போற் பயனற்றுக் கிடக்கும். ஆணவம் பயனற்றுக் கிடப்பவே, தானென்னும்முனைப்பில்லாமையால் கர்மம் இல்லை. இவை இல்லாமையால் மாயையும் அவர்களுக்கு வேண்டப்படுவதில்லை. ஆகவே சிவஞானிகள் ஆணவம் கர்மம் மாயை யென்னும் மூன்று தடைகளும் அவற்றின் வாசனையும் நீங்கி அறிவு முழுவதும் விளங்கப்பெற்று எல்லாம் சிவமயமாகக் கண்டு, சிவபெருமானாற் கொடுத்தருளப் பெறும் பேரானந்தத்திலே அழுந்தி ஆனந்தமயமாயிருப்பார்கள். இதுவே மோக்ஷ நிலை.

"இறைவன் உயிருலக மென்னுமிவை மூன்றின்
திறனன் குணர்த்தல்சைவ சித்தாந்த உண்மைகளாம்."

# அகத்திய முனிவரைப் பற்றிய ஆராய்ச்சி.

[திருநெல்வேலி சைவத்திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. அட்வக்கேட் அவர்கள்.] .

தமிழ்நாட்டுப் பண்டைப் புலவர்களைப்பற்றி ஆராயுங்காலத்தில், முதற்புலவராக முப்புரம் எரித்தவரைக் கூறவேண்டும். பின்னர், அவர் புதல்வராகிய முருகவேளைக் கூறவேண்டும். சிவபெருமானிடத்தும் முருகவேளிடத்தும் நூல் கேட்டவர் அகத்தியர். முதற் சங்கம் தோன்றிய காலத்துச் சிறந்து விளங்கிய முனிவரும் அகத்தியரே. அகத்தியர் வேறு நான்கு முனிவரோடு மகேந்திர மலையில் ஆகமம் எனப்பட்ட அருநூல்களையுங் கேட்டனர். அகத்திய முனிவர் கந்தபுராணப் போர் நிகழ்ந்த பண்டைக் காலத்திலேயே, கிரௌஞ்சம், விந்தம் முதலிய மலைகளை அடக்கினர் எனவும், வில்வலன் வாதாவி என்னும் அரக்கர்களை மடிவித்தார் எனவும், உமையம்மையார் திருமணத்தின்போது தென்றிசைக்கட் சென்று நிலங்காத்தார் எனவும் கேட்கப்படுகின்றது. அக் கந்தபுராணத்திலே விதர்ப்பர்கோன் மகளாய உலோபாமுத்திரையை அவர் மணந்து, சித்தன் என்னும் புதல்வனை அளித்தனர் எனவும் கூறப்பட்டது. அவரது கமண்டலத்தினின்று காவிரி கவிழ்க்கப்பட்ட கதை,

> "அமர முனிவன் அகத்தியன் றனாது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"

என மணிமேகலையுள்ளுங் கூறப்பட்டது.

உலோபாமுத்திரையென்றபெயர் வடமொழியாக இருப்பதால், வடநாட்டுப் பெண்ணினை அகத்தியர் மணந்தார் என்பது தோன்றுகிறது. அவர் மனைவி புலத்தியனாரது உடன்பிறந்தாள் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். புலத்தியர் மரபில் வந்தவன் இராவணன்; அவன் தென்னாட்டுமன்னன். புலத்தியர் என்ற சொல்லும் அகத்தியர் என்ற சொற்போலத் தமிழாகக் கருதற்பாலது. பழைய வரலாற்றைத் தெளிவாக உணர்முடியாத இக்காலத்திலே, மாறுபட்ட இரண்டு கொள்கைகளுள் ஒன்றைத் துணிதல் எளிதன்று. அகத்தியர் ஒருகாலத்திற் புலத்தியருடன் பிறந்தாளை மணந்திருத்தல் கூடும்; பின்னர் விதர்ப்பர்கோன் மகளையும் மணந்திருக்கலாம். வடநாட்டு மக்களோடு பெண்கொண்டு கொடுக்கும் வழக்கம் அக்காலத்து இருந்ததென்பது ஊகிக்கப்படும். ஆண்டும் தமிழ்மக்கள் ஒருகாலத்தில் இமயம்வரை பரவியிருந்தனர். கதிரவன் வழிபாடு தமிழ்மக்களுள் நிலவியதென்பது, 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்ற தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவாலே இனிது துணியப்படும். கதிரவனையோ, இந்திரனையோ புகழும் இருக்கு வேதப் பத்தாவது மண்டிலத்தின் தொண்ணூறாவது நூற்பாவுள், 'அகத்தியரது தங்கை மக்களுக்காக இணையற்ற செங்குதிரைகளைப்பூட்டி யோட்டுவிக்கின்ற ..' என்னும் பொருளுடைய சொற்றொடர் காணப்படுகின்றது. அதனால், அகத்தியரது தங்கை வடநாட்டில் மணவாழ்க்கையெய்தி அவள்பெற்ற புதல்வரின்கதை ஆரிய வேதத்துட் குறிக்கப்பட்டமை காண்க. ஆரிய வேதத்துள் அகத்தியர் பாடிய பாடலாக வேறு ஒன்றுங் காணப்படவில்லை. ஆதலால், அவர்



ஆரியவேத முனிவருள் ஒருவராகக் கருதுதற்கு இடமில்லை. வடமொழி வான்மீக இராமாயணத்துள் மலயமலைத் தொடர்ச்சிக்கண் பொதியில், காவிரித்தோற்றம், கோதாவரித் தோற்றம் என்னும் இடங்களில் அகத்தியரது இருக்கைகள் இருந்தனவாகவும், அகத்தியரை நாடி இராமர் சென்று வழிபட்டுத் தமக்கு வேண்டிய போர்க்கருவிகள் பெற்றதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

வான்மீகி இராமாயணத்தின் சிலபடிகளின் மட்டும் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் அகத்தியர் காடுகெடுத்து நாடாக்கியது கூறப்பட்டது. அதன் கண்ணும் துவாராபதி போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிவந்த அரசரை அழைத்துக்கொண்டு சென்றதாகக் கூறப்படவில்லை. ஆனால், ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியப் பாயிர உரைக்கண் அவ்வாறு வரைந்துள்ளார். அது தக்க சான்றுடைத்தாய்த் தெரியவில்லை. யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு வந்ததாக நச்சினார்க்கினியர் புனைந்துரைத்தனர். அத்திரணதூமாக்கினியாரையே தொல்காப்பியர் என்றனர். யமதக்கினியாருடைய பாடல்கள் இருக்குவேதத்திற் காணப்படுகின்றன. யமதக்கினியின் புதல்வன் பரசுராமன்என்று வான்மீகி பாலகாண்டம் எழுபத்து நான்காவது சருக்கத்திற் கூறப்பட்டது. அங்கே குறித்த யமதக்கினியாராதல் அவர்க்கு முன்னோராதல் இருக்குவேதப் பாடல்களைப் பாடியிருக்கலாம். துவரைநகரிற் கண்ணன் ஆண்டது, இராமாயண காலத்திற்குப் பின்பு நடந்த பாரதகாலத்திலேயாதலின், கண்ணன் வழிவந்த அரசர் காலமும், இராமாயண காலத்திற்கு முன்னே பாடப்பெற்ற இருக்குவேதத்துட் போந்த யமதக்கினியார் காலமும் ஒன்றல்ல. இராமாயண காலத்திற்குப் பன்னாட்கு முன்னரே வில்வலன் வாதாவி கதை நிகழ்ந்திருத்தல் வேண்டும். இறைவர் திருமணக் காலத்திலே தெற்கே புறப்பட்ட அகத்தியர், துவரைநகரிற் கண்ணன் வழியிலுள்ளாரை அழைத்துக்கொண்டு போதல்வரை யாண்டுத் தங்கினரோ அறிகிலோம். ஆதலால், ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் வரலாறு காலமுறைக்குச் சிறிதும் பொருத்தமில்லாததாகக் காணப்படுகிறது.

அகத்தியனார்க்கும் தொல்காப்பியனார்க்கும் நடந்ததாகப் பேசப்படும் வழக்கும் கேள்விச் செய்திகளில் (கர்ணபரம்பரையில்) ஒன்றே. அதுவும் கொள்ளத்தக்கதன்று. வையை நீர் இழுத்துச் சென்ற குமரியாரைத் தொல்காப்பியனார் ஒரு மூங்கிற்கோலை நீட்டிக் கரையேற்றியதற்காக அகத்தியனார் அவரிடங் குற்றங்கூறுதல் அவருக்கு இயற்கையாமோ? அகத்தியம் மறைந்தது ஏனைப் பண்டை நூல்கள் மறைந்த ஏதுவினாலேயாம் என்க. மறைந்த ஒவ்வொரு நூலுக்கும் பழிக்கதை (சாபக்கதை) கட்டுவாரில்லை.

கந்தபுராணத்துள்ளும் வான்மீகத்துள்ளும் கூறியவாற்றால் அகத்தியர் பெருந்தவ முனிவர் என்பதும், அவர் தென்னாட்டின்கண் குஞ்சரம், மகேந்திரம், சையம் முதலிய இடங்களில் தமக்குக் கோயிலுடையவராய்த் தென்றிசைப் பகைவர் சிலரால் தமிழ்மக்களுக்குத் தீதுவராது காக்கும் பேராற்றலும் பெற்றியும் வாய்ந்தவராய்த் தமிழ் முதலாசிரியருள் ஒருவராய்த் திகழ்ந்தார் என்பதும், அவர் தம்பி தங்கை மனைவி மகன் முதலியோரையுடையவராய் விளங்கிய குடும்பத் தலைவர் என்பதும், அவர் மேரு, இமயம் முதலிய இடங்களில் தவங்கிடந்தனர் என்பதும், நீண்ட ஆயுளுடையவ

ராய் நெடுங்காலம் வாழ்ந்திருக்கும் தவவலிமையுடையவர் என்பதும், இராமர் முதலிய அரசர்களாலும், வான்மீகர் முதலிய முனிவர்களாலும், இந்திரன் முதலிய வானோர் பலராலும் அச்சத்தோடும் அன்போடும் வணங்கப்பட்டவர் என்பதும் போதரும். அவர்க்குத் தமிழ்முனி என்றபெயரே யாண்டும் கந்தபுராணத்துள் வழங்குவதாகவும், பொதியமலையே அவர் உறைவிடமென்று கம்பராமாயணம் நாட விட்ட படலத்துட் கூறுவதாகவும் திரு. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அகத்தியர் வரலாற்றையும் அவர்கள் செந்தமிழ்ச் செல்வி யிதழில் விரிவாக எழுதினமையால் ஈண்டு விரிக்க வேண்டியதில்லை. மதுரைக் காஞ்சி யியற்றிய மாங்குடி மருதனாரால் அகத்தியர்,

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய"

என்று சிறப்பிக்கப்பட்டனர்.

செங்கோன்றரைச் செலவின் சிறப்புப்பாயிரத்தில் முத்தூர் அகத்தியன் என்னும் ஒருபுலவர் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அந்நூல் தலைச்சங்கத்தின் நூலாகத் தெரிகின்றது. அதனால் அகத்தியர் என்ற பெயர் தமிழ்நாட்டில் மாமுனிவர்க் கன்றி வேறு சிலர்க்கும் வழங்கிய தமிழ்ப் பெயராகத் தெரிகின்றது. இதனால் விளங்குவது யாதெனில், தமிழ்நாட்டிலேயே தொன்முது குடியாகப் பேர்பெற்றுச்சிறந்த ஒருமரபிற் றோன்றிய பெரியாராய்த் தவவலிமையினால் வானோரும் ஏனையோரும் தம்மை வழிபட்டுப் பெரும்பயன் கொள்ளும் பெற்றி வாய்ந்தவராய்ச் சிவபெருமானிடத்து ஆகமம் என்னும் அருணூல் கேட்டவராய்ப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கும் தவப்பேறுடையவராய் அறிவர்தலைவராய் விளங்கினர் அகத்தியர் என்பதே. அகத்தியர் ஒருவரோ ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வது இயலாது என்று கொள்வார், அகத்தியரது குடும்பத்திற் பலர் அப்பெயருடையவராய் வெவ்வேறு காலங்களிற் சிறப்புற்று விளங்கினர் என்பர். முனிவர்கள் பலரும் மக்கள் வகுப்பினரே. மக்கள் வகுப்பினராயின் நிலவுலகத்தில் எந்நாட்டிலாவது அவர்கள் தோன்றி யிருக்கவேண்டும். ஆரியநாட்டில் தோன்றினால் அவரை ஆரியர் என்ப. தமிழ் நாட்டிற் றோன்றினால் தமிழரென்ப. தக்கமுனிவரிடத்து ஒருசார்பாய பற்றில்லாதிருத்தல் இயல்பே. ஆயினும், பிறந்த நாட்டை வைத்தும், மக்கள் வகுப்பை வைத்தும் அவரை இன்ன இடத்தார், இன்ன மரபினர் என்று கூறுவதாற் குற்றமில்லை. திருஞானசம்பந்தரை அந்தணர் என்பதினாலும், திருநாவுக்கரசரை வேளாளர் என்பதினாலும் குற்றமின்மை காண்க.

இனி, அமரமுனிவன் என்றமையால் அகத்தியர் இவ் வுலகத்திற் றோன்றாதவர் என்பர் சிலர். அவர் தேவ இருடியாகிய நாரதர் கும்பத்திற் றோன்றியவர் என்று நூல்கள் அதனை வற்புறுத்து மென்பர். அங்ஙனம் தோன்றினும், உலகத்தில் யார் நடுவில் முதன்முதல் தோன்றினாரோ அவர் அன்னோர் மரபினர் ஆவரென்று கூறுதல் பொருத்தமானதே. ஞாயிற்றினது மரபென்றும், திங்களது மரபென்றும் கூறப்படும் சோழ பாண்டிய மன்னர் தமிழ்நாட்டினரே என்பது தெளிவு. அவ்வாறே அகத்தியமுனிவரது மரபையுங் கொள்க.

அகத்தியர் சமயம் சிவநெறி என்பது தெளிவு. சமணர் அவரை அவலோகிதன் என்பானிடத்து நூல் கேட்டதாகச் சொல்லுதல் அவர்களது



பற்றுரையேயாம்; உண்மையன்று. அகத்தியர் முத்தமிழுக்கும் இலக்கணஞ் செய்தார் என்றும், அது பன்னிரண்டாயிரம் நூற்பாக்களை யுடையதாயிருந்தது என்றும் கேட்கப்படுகின்றது. அகத்தியம் இப்போது வெளிப்படவில்லை. அகத்திய நூற்பா என்றுசொல்லப்படும் யாவும் அவருடையனவாகத் தெரியவில்லை. அவர் ஆனந்தக்குற்றம் கூறினார் என்று குறித்தற்கு யாப்பருங்கலத்தில் எடுத்துக்காட்டிய நூற்பாக்களனைத்தும் பிற்காலத்தில் எழுந்தனவே என்பதை ஆசிரியர் நச்சினார்க்கினியர் நன்கு விளக்கியுள்ளார். அகத்தியர்க்கு இயற்றமிழ் மாணவர்கள் பன்னிருவர். அவ்வாறே இசைத்தமிழுக்கும் வேறு மாணவர்கள் இருந்திருத்தல் கூடும். அவருடைய இயற்றமிழ் மாணவர் பன்னிருவர் இயற்றிய நூல் பன்னிருபடல மெனப்படுமென்று புறப்பொருள் வெண்பா மாலையிற் கூறப்பட்டது. அதுவும் முற்றிலும் வெளிப்படவில்லை. அது புறப்பொருள் நூலென்பதுதெளிவு. பன்னிருபடலப் பாயிரமாகக் கூறப்படும் செய்யுளொன்றில், அகத்தியம் என்பது குறிக்கப்படுகின்றது. அது,

"ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோன்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்." என்றதாகும்.

அகத்தியம் என்னும் நூலே இயற்றப்படவில்லை யென்று கூறுதல் தவறாகும். இறையனாரகப்பொருட் களவியலுரையுள், தலைச்சங்கத்தார்க்கும் இடைச்சங்கத்தார்க்கும் நூல் அகத்தியம் என்று கூறப்பட்டது. சிற்றகத்தியம் ஒன்று பேரகத்தியத்தின்வேறாக இருந்ததற்குச் சான்று யாதுமில்லை. அகத்தியர் இயற்றிய நூலின் பயனையே நாம் நுகர்கின்றோமே யன்றி, அந்நூலின் ஒரு நூற்பாவுந் தெளிவாகக் கிடைக்கவில்லை.

"ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையான்
இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்."

என்னும் நூற்பா அகத்திய நூற்பாவா மென்னில், அது தொல்காப்பிய நூற்பாவோடு ஒத்துநிற்கவில்லை.

அகத்தியர் நக்கீரருக்கு இலக்கணம் அறிவுறுத்தியதாகத் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது. இக்காலச் சித்தர் நூல்களுட் பல அகத்தியராற் செய்யப்பட்டன என்பர். அவற்றின் சொன்னடையையும் பொருணடையையும் நோக்குமிடத்து அகத்தியரை வழிபட்டோரால் அவை நெடுங்காலத்திற்குப் பின் இயற்றப்பட்டிருத்தல் கூடுமென்று கொள்ளுதலே பொருத்தமென்று தெரிகிறது. அகத்தியருடையமாணவர் பன்னிருவர்என்பது,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும்."

என்பதனால் விளங்கும்.

௨

# யதார்த்தவாதி வெகுஜனவிரோதி.

(நையாண்டிப் புலவரின் நக்கல் வேலை.)

'யதார்த்தவாதி வெகுஜனவிரோதி' என்பது ஒரு கிழமொழி. அதாவது கிழவர்கள் சொல்லுகின்ற மொழி. இதையே பழமொழி என்றுஞ் சொல்லுவார்கள். பழமொழி என்றால் பழுக்க மொழி என்றாவது பழையகாலத்து மொழி என்றாவது பொருள் செய்து கொள்ளலாம். பழையகாலம் என்று சொல்லும்போது நெடுநாட்களுக்கு முந்தியகாலம் என்று நினைக்க வேண்டியதில்லை. ஒருநாள் ஆக்கிய சோற்றைத் தண்ணீரில் போட்டு மறுநாள் உண்ணும்போது அது, 'பழையது' ஆகிவிடுகிறது. ஆகையால், 'நான் பழையது சாப்பிட்டேன்' என்று சொல்லும் வழக்கம் நிறுத்திவிட்டுப் பெரும்பாலோர் புதியது சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். இது நிற்க:

'யதார்த்தவாதி வெகுஜனவிரோதி' என்று சொல்லிக்கொண்டு நான் ஒரு தெருவழியே போய்க் கொண்டிருந்தேன். அங்கே சுமார் நாற்பது வயதுடைய ஒரு அம்மாள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னம்பல் இரண்டு மிக நீண்டு, சிவந்த கீழ் உதட்டில் பதிந்து இருந்தன. பல் வெள்ளையாகவும் உதடுசிவப்பாகவு மிருந்ததைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு எண்ணம் உண்டானது. செவ்வாய்க்கும் வெள்ளிக்கும் இடையில் புதனும் வியாழனும் வரவேண்டியிருக்க அதுதவறிச்செவ்வாயும் வெள்ளியும் இந்த அம்மாளுடைய முகத்தில் ஒன்றாகக் கூடியிருக்கிற விந்தையைச் சொன்னால் ஒருவரும் நம்பமாட்டார்கள் என்று என் மனத்தில் எண்ண முண்டாயிற்று. நான் பெரும் புலவனாயிருந்தால் இதைப்பற்றி இனிய கவி ஒன்றுபாடி, அதைச் செல்வமுடையவர்களிடத்தில் சொல்லிக் கொஞ்சம் பொருள் சம்பாதித்துக் கொள்வேன். கவிபாடுந்திறமை எனக்கில்லாததை நினைத்து நினைத்து மிக வருந்தினேன். அப்போது எனக்கு அழுகைவந்துவிட்டது. சீ! நாம் அழக்கூடாது என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு, 'யதார்த்தவாதி வெகுஜனவிரோதி' என்று உரத்தகுரலில் கத்தினேன். இஃது அந்த அம்மாளுடைய செவியில்பட அவர்கள், யதார்த்தத்தைப் பேசுவதால்ஒருவர் ஏன் வெகுஜனவிரோதியாகவேண்டும்? இஃதெல்லாம் வெறும்பேச்சு என்று சொன்னார்கள். அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து, 'அம்மா உங்கள் பல்லைப் பழனியாண்டிக்கு விட்டிருக்கிறீர்களா? அல்லது ஏழுமலையானுக்கு விட்டிருக்கிறீர்களா?' என்று வினவினேன். அப்போது அந்த அம்மாளுடைய முகஞ்சுருங்கி, பல் முன்னிலும் அதிகமாய் நீண்டது. 'நீ என்ன



சொல்லுகிறாய்?' என்று அவர்கள் சினந்து சீறிவிழுந்து கேட்டார்கள். நான் மிகுந்தசாந்தத்துடன், இல்லை, பழனிக்கு அல்லது திருப்பதிக்கு வளர்த்தமயிரைப்போல் உங்கள் பல் வளர்ந்திருக்கிறதே, அஃதேன்?' என்றேன். உடனே அந்தஅம்மை, என்னைக் கட்டையில் வைப்பதைப்பற்றியும், பாடையில் கொண்டு போவதைப்பற்றியும் பல வகையில் பாடத்தொடங்கினார்கள். 'யதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்பது சரியாய்ப் போயிற்று.' என்று நான் வெகு அமைதியுடன் சொன்னேன். ஆனால், அந்தஅம்மையாருடைய பாட்டு முன்னிலும்பன்மடங்கு அதிகமாயிற்று. இந்தவேளையில் என்னசெய்வதென்று தெரியாமல் நான் மயங்கி நிற்கையில், எனக்கு எதிரே வீதியில் வந்த ஒருவர், 'இந்த அம்மாள் ஏன் உன்னை இப்படி திட்டுகிறார்கள்?' என்று விசாரித்தார். பல் நீண்டிருக்கிறது என்று நான் சொன்னேன். அதன்பேரில் அவர்கள் ஒரு பல்லவி பாடுகிறார்கள், வேறொன்று மில்லை' என்று சமாதானமாய்ப் பதிலுரைத்தேன். இதைக் கேட்டுவிட்டு வந்தவர் தம் வழியே போகாமல் 'இந்த அம்மாள் யார்?' என்று கேள்வி போட்டார். 'இவர்கள் யாரோ தெரியாது; ஆனால் அவர்கள் பெயர்மாத்திரம் எனக்குத் தெரியும்.' என்றேன்.

"இவர்களுடைய பெயர் என்ன?'

நான்:—'கௌளி அம்மாள்'

'கௌரி அம்மாளா?'

நான் 'இல்லை கௌளி அம்மாள் தான்'

'கௌளி அம்மாள் என்றுகூடவா பெயர் இருக்கும்?'

நான் 'ஏன் இருக்கக்கூடாது? அதில் என்னபிசகு?'

'இல்லை, சாதாரணமாய் அப்படிப்பெயர் இருப்பதில்லை'

நான் 'கௌளி என்றால் என்ன?'

'கௌளி என்றால் பல்லி'

'நான் இந்த அம்மாளுடைய பல்லைப் பார்த்தபின் இவர் பல்லியம்மாள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?'

மேலே கூறியதில் கடைசி வார்த்தை என் வாயை விட்டு வெளியே வருமுன் வாசலில் நின்று வசைபாடிய அம்மணி திடுதிடுவென்று வீட்டிற்குள் ஓடினார்கள். ஓகோ! நம்மை வாழ்த்தியது போதாதென்று ஏதோ வெகுமானங் கொடுப்பதற்காக அம்மையார் வீட்டிற்குள் போகிறார்களென்று நான் அறிந்து கொண்டு மின்னல்மின்னி மறைவதுபோல் அவ்விடத்திலிருந்து மறைந்தேன்.

'ஐயோ! திருவுளமே! அம்மாள் பல்லு ஒரு முழமே.'

உ

# தில்லைத் திருவாயிரம்: திருப்புகழ்.

---

**வண்ணச்சரபம் ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிக ளியற்றியது.**

தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தனதன தனதன தனதன தனதன—தனதானா.

வெற்புக் கொப்புச் செப்பப் பொற்புற்
றிலகிய வனமுலை மகளிரை யநுதின
மிச்சித் தாச்சித் தத்திற் பித்துப்
பெருகிந லறமொடு தவசையு மடியொடு
விட்டுத் தாக்கத் திற்பட் டுச்செத்
துறவினர் களுமெடு மெடுமிது பிணமென-வொழியாதே

வித்தத் தைக்குப் பைக்கொக் கக்கொட்
டியமனை யுடையவர் மிசைபல கவிதைக
ளச்சப் பட்டுக் கொற்றச் செற்றக்
கவுணர்க ளிரிதர வடுமுர கரியென
விற்கைப் பற்றிப் புட்பத் தைத்தொட்
டரிவையர் படைநடு வருமெழின் மதனென-மொழியாதே

அற்பச் சொற்கத் தாக்கிச் சைப்பட்
டழலெதி ருயிர்வதை செயுமிழி வினரையு
நற்பெட் பிற்குட் சுத்தப் பத்திக்
கிணையிலை யெனிலிகழ் தருமுனி வரரையு
மைக்கத் தாக்கெட் டெட்டுச் சித்திக்
துறைவழி செலல்பிழை யெனுமடி யினரையு-மதியாதே

அத்திக் குட்கற் றெப்பத் திற்சுற்
றியுமுயு முனிவனி லயமணர்கள் கழுமர
முற்றுப் பட்சிக் கொக்கத் துய்க்கைக்
கிரையென வொழியமு னடுமத லையிலணி
யக்கைப் புத்தர்க் குக்கட் டிப்பற்
றியவனி லழகிய பரவைதன் மகிணனில்-மகிழேனோ?

சற்பத் தைப்பச் சைப்புற் கொத்தைப்
புனலினை மதியினை யிறகினை யிதழியை
மத்தத் தைத்தூட் டச்சித் தப்பொய்த்
தவர்விடு தலையினை யணிசடை முடிமிசை
தத்தைப் புட்குச் சொற்கற் பிக்கத்
தகுமுமை புலவியி லவள்பத மலர்களு-மணிவோனே!



தக்கற் செற்றுப் பக்கத் திற்றுற்
றவனுத வியவய நிணநுக ரமரரை
வெட்டிக் குத்திக் திக்கெட் டிற்சிற்
சிலரிரி தரமுடு கியவலி மொழிபவர்
சக்குக் குச்சித் தத்துக் குச்செப்
பருமகிழ் வுறமழ விடையினி லிலகிடு-மிறையோனே!

கற்பத் திற்பற் றற்றெய்ப் பற்றுற்
றுலகில கிடிலறி வுடன்வரு பெரியவர்
புத்திக் குட்டித் திச்தாச் சத்திச்
திரள்களு மயலல வெனநிகழ் பரசிவ
கற்றெட் டுத்தட் டுக்கெட் டுப்பொற்
பணமயல் கொடுதிரி பவனுவல் கவிகளும்—விழைவோனே!

கத்திக் கத்திச் செத்தற் கொத்துத்
தளர்முய லகனகன் முதுகினி லொருபதம்
வைத்துத் திக்கத் தக்கத் தித்தெய்த்
திமிதிமி தகதக வெனநட முயல்பவ
கட்டத் தைத்தட் டிச்சுட் டுச்சிற்
சுகமரு ளிடுமுயர் கனகச பையில்வளர்-பெருமானே!

---

# மதிப்புரை மஞ்சரி.

## விளத்தொட்டிப் புராணம்.

விளத்தொட்டி என்பது சோழவள நாட்டில் மண்ணியாற்றங் கரையிலுள்ளதும், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்துள்ள க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் குறிக்கப்பட்டுள்ளது மான ஒரு சிவஸ்தலம். இத் தலபுராணம், புராணம் பாடும் பெரும் புலவராய்த் திகழ்ந்த திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை யவர்களால் இயற்றப்பெற்றது. ஏட்டி லிருந்த இதனைக் கதைச்சுருக்கம் குறிப்புரைமுதலிய அங்கங்களு டன் செவ்வியமுறையி லச்சியற்றி வெளியிட்ட மகோபகாரி, ஷை பிள்ளையவர்களின் மாணவராகிய மறைத்திருவாளர் மகாமகோபாத் தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்ட்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள். இதன் முகவுரையால், இப்புராண அமைப்பும், நூதலிய பொருளின் நுண்மையும் திண்மையும் பிறவும் நன்கு விளங்கத்தக்க னவாம். இதனை, அச்சியற்ற முயன்ற திருச்சிற்றம்பலம் ஸ்ரீநடன புரீசர் கோயில் தருமகருத்தரும் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய திரு. சி. பொன்னுசாமிபிள்ளை யவர்களும், அச்சிடற்குப் பொருளுதவி புரிந்த இத்திருத்தலத்து ஸ்ரீபிரமபுரீசர் கோயில் தருமகருத்தாகிய திரு. இராமலிங்க பிள்ளையவர்களும், ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை

யவர்கள்சரித்திரத்தைவெளியிட்டபோது ‘இக்கவிஞர்பிரானியற்றிய நூல்களில் வெளிவராதனவற்றைத் தமிழ்மக்கள் வெளிவரச்செய்தல் வேண்டும்.’ என அதன்முகவுரையில் குறிப்பிட்டிருக்கும் திரு. ஐயரவர்களின் வேணவாவைப் பூர்த்திசெய்த புண்ணியப்பேறு பெற்றவர்களானார்கள். இவ்வாறே, பிள்ளையவர்களியற்றிய மற்றைய பிரபந்தங்கள் புராணங்கள் முதலியவற்றையும், அவ்வத் தலங்களின் தருமகருத்தர்கள் அபிமானிகள் முதலியவர்கள் திரு. ஐயரவர்களைக் கொண்டே அச்சியற்றி வெளியிட முயலின் அவர்கள், கலைமாச் செல்வர் தேடிவைத்த நமது தமிழ்க் கருவூலத்தைப் பாதுகாக்கும் கடப்பாடுற்ற கண்ணிய சீலர்களாவார்கள். அவ்வாறே இறைவன் திருவருள் புரிவாராக! இதன்விலை அணா 6.

## சங்கரநயினார் கோயில் அந்தாதி.

சங்கரநயினார் கோயில் விஷயமாக அந்தாதித் தொடையில் திரிபணி யமையக் கட்டளைக்கலித்துறையால் யாக்கப்பெற்றது. இதனையாக்கியோர் பெயர் தெரிதற்கில்லை. இதுவும் ஷை மகாமகோபாத்தியாய ஐயரவர்களாற் பரிசோதித்து, அவர்களெழுதிய குறிப்புரை முதலியவற்றுடன் நல்லமுறையில் அச்சியற்றப் பெற்றிருக்கிறது. இதனது முகவுரையால் இவ்வந்தாதியின் வரலாறு, அமைப்பு, செய்யுட்டிறன் முதலிய பலவும் தெள்ளிதிற் றெரிந்துணரலாம். ஆசிரியர் துணையின்றிப் படிப்பார் யாவரும், இதனது குறிப்புரையின் உதவிகொண்டே இந்நூற்பொருளை யெளிதி லுணர்ந்து, கவிச்சுவையிற் றிளைத்து இன்புறத்தகும். இதன் விலை அணா 6.

## மதுரைச் சொக்கநாத ருலா.

இது, புராணத் திருமலைநாதர் என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடாலயக்கருத்தரும் வித்தியாவிநோதரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகளவர்கள் விருப்பத்தின்படி, ஷை மகாமகோபாத்தியாய ஐயரவர்களால் நூதனமாக எழுதிய குறிப்புரை, நூலமைப்பின் அருமைபெருமைபற்றிய சிறந்த முகவுரை, நூலாசிரியர் வரலாறு, நூல் நுதலிய பொருட்சுருக்கம் ஆதிய பலவும் அங்கமாகக் கொண்டு தெள்ளியமுறையில் அச்சிடப்பெற்றுளது. திரு. ஐயரவர்கள் பதிப்பிக்கும் நூல்களின் முகவுரைகள், அவ்வவ் நூற்பொருள்களைத் தொகுத்து, பலவகையாக வகுத்து, படிப்பார் மனதில் எளிதிற் பதிதற்குத் தக்கவாறு விரித்து விளக்கும் மேன்மையுடையனவாகும். குறிப்புரைகள், மொழித்திறத்தின் முட்டறுத்து நூற்பொருளின் நுண்மையுணர்தற்குத் துணையாயிருத்தலுடன், அவ்வவ் விடைக்கியைந்த முன்னோர் மொழிகளைப் பொன்னேபோற் போற்றிப் புணர்த்திப் பொலிகின்றன. இத்தகுபெருமைப்பின் சீருரைக்க



நுண்மா ணுழைபுல மிக்க அறிஞர்க ளுளக்கணுக் கடுக்குமன்றி, எம்மனோர் மதிப்பிற் கெட்டுணையு மியலுவதின்றென இசைக்கின்றேம். இதன்விலை அணா 6.

## வியாசத்திரட்டு.

இது, மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பிறந்தது, வளர்ந்தது, கல்விகற்றது, ஆசிரியர் பதவியிலுற்றது, பழந்தமிழ்ச் சங்க நூல்கள் ஆதியபலவும் பரிசோதித்துத் திருத்தமும் விளக்கமு முற அச்சிற் பதிப்பித்து வருவது, பெறற்கரும் பட்டப்பெயர்கள் பலவும் பெற்று விளங்குவது ஆதிய வாழ்க்கைத் திறன்பற்றி, ஐகோர்ட்ஜட்ஜுகள், பண்டிதர்கள், பத்திராதிபர்கள் ஆதிய பதின்மர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வரைந்துள்ள வியாசங்களும், வாழ்த்துச் செய்யுட்களும் ஒருசேரத் திரட்டப்பெற்றது. திரு. ஐயரவர்களின் பெருந்தகைமையும், அருங்குணங்களும், பிற நலன்களும் பிண்டமாகக் கொண்டுணர்த்தும் பெற்றியுடையது. இதனை அச்சியற்றி திரு. ஐயரவர்களின் உருவப்படத்துடன் வெளியிட்ட உரவோர், சென்னை, ‘இந்துநேசன்’ பத்திராதிபர் திரு. ல. அனந்தையரவர்கள். இதன்விலை அணா 8.

## தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி.

இது, யாழ்ப்பாணத்து நல்லூர் உயர்திரு: சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் ஆக்கப்பெற்றது. தமிழ்ச் சொற்கள் பிறக்கும் இயல்வகைகளை யினிது விளக்குவது. சுகிர்ந்து பரந்த செந்தமிழ்ச் சொற்பரவைகளுள், ஒவ்வொரு முதனிலை (தாது: Root) வழித் தாய்ப் பல்வேறு சொற்கூட்டங்கள் கிளைத்தியலும் முறைகளை யெல்லாம்வரையறுத்துச்சிலகட்டளைகளுக்குள் அவையடங்குமாறு வகுத்துரைக்கும் மாண்புடையது. வடமொழி முறைபற்றித் தமிழுக்கும் முதனிலை யியல்புகளைத் தொகுத்துப் பலவிதிகளால் விளக்கிப் பொருட்பொருத்தமுறக் காட்டுந்திறன் ஸ்ரீமத் சுவாமிகளவர்கட்கே சிறப்புரிமை யாயிற்று. இது, பன்னாண் முயன்றுழைத்து முடிக்கத்தக்க மொழித்தொண்டாகும். இவ் வரும்பெரும் பணி முற்றுமேல், செந்தமிழ் மொழிகளின் முதனிலை யியல் தெரிந்து படிப்பார் பலரும் ஒரு சொன்மூலத்தால் பல சொற்களையும் பொருள்களையும் ஒருங்கே எளிதி லுணர்ந்து மொழியுணர்ச்சியின் முன்னேறுதற்குப் பெருந்துணையாகும். இத் தமிழ்த்தாய்த் தொண்டு முட்டின்றி முடியத் தலைச்சங்கத் தலைமைப் புலவராய் விளங்கிய தனிமுதற்கடவுள் தண்ணருள் புரிக! மொழிமூலம் விளக்கும் இச் சிறந்தநூலை அச்சிட்டு வெளியிடுதற்கு வேண்டிய பொருளுதவிபுரிந்த புண்ணியசீலர், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடாலயக் கருத்தராகிய ஸ்ரீலஸ்ரீகாசிவாசி சுவாமிநாத சுவாமிகள் ஆவார்கள்.

இம்மடாலயக் கருத்தாவர்கள் தமிழ்மொழி யாக்கங் கருதிப் பலதுறைகளிலும் உழைக்கின்றவர்கட்கு இயன்றவுதவி புரிந்துவருதல் யாவரும் போற்றற் குரியதாம்.

## சந்தியாவந்தன ரகசியம்.

இது, யாழ்ப்பாணத்து வித்துவான் ஸ்ரீமத் சி. தாமோதரம் பிள்ளை யவர்கள் இயற்றிய செந்தமிழ் உரைநடை நூல். சந்தியாவந்தனம் செய்தற்கு நோக்கும் திக்கு, சுத்திவகை, ஆசமனம், ஸ்நானவகை, கரநியாசம், அங்கநியாசம், பிராணாயாமம், தியானவகை, தீர்த்தோபசங்காரம் ஆதியவற்றின் இயல்புகளை யாவரும் அறிந்து அநுட்டிக்கத் தக்கவாறு எளிய நடையில் இயன்றுள்ளது. இது போது, ஷை பிள்ளையவர்களின் சகோதரர் வித்துவான் திரு. சி. நாகலிங்கம் பிள்ளையவர்களால் மூன்றாவது பதிப்பைப் பெற்றுள்ளதால், இதனது பிரதிகள் பலர்க்கும் பயன்பெறும் வகையில் மிகுதியாகச் செலவழிகின்றன எனத் தெரிகின்றது. இதன்விலை சதம் 25. 'வித்துவான்: சி, நாகலிங்கம் பிள்ளை, வதிரி, கரவெட்டி போஸ்ட், இலங்கை.' என்ற விலாசத்திற் பெறலாம்.

## அறிவுநெறி.

நமது சித்தாந்த சைவ சமயத்தில், ஆன்மாக்கள் இறைவன்றன் இணையடிகளிற் கலந்து இன்பந் துய்த்தற்குரியநெறிகள் இரண்டாக வகுப்பட்டுள்ளன. அவை அன்புநெறி அறிவுநெறி என்பனவாம். அன்புநெறியாவது உயிர்ச்சார்பு பொருட்சார்புகளாகிய பாசத்தாற் கட்டுண்டும், தாமரையிலைத் தண்ணீர் போல் அவைகளிற் றாக்கற்றிருந்து, அறிவு இச்சை செயல்களை இறைவனுக்குகந்த திருப்பணிகளி லீடுபடுத்தி அயரா அன்புடையராய் அரன்கழலை அடைதலாம். அறிவுநெறி யாவது அவ் விருவகைச் சார்புகளில் தமது அறிவு இச்சை செயல்களைச் செலுத்தாது, அவைகளில் வைராகம் உடையராய்ச் சிவஞான நூல்களிடத்தும் அவற்றை உபதேசிக்கும் ஆசிரியரிடத்தும் தமது அறிவுஇச்சைசெயல்களைச் செலுத்தித் திருவருள் வசத்தராய்த் திருவடியிற் கலத்தலாம். இவ்வறிவுநெறி யுணர்த்தும் நூல்கள் நமது செந்தமிழிற் சிவஞானபோதம் முதலிய சித்தாந்தசாத்திரங்கள் என்பர். இவற்றின் சாரங்களை வடித்துத் திரட்டி, உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருள்களின் இயல்புகளைச் சுருக்கிவிளக்குங் கருத்துட்கொண்டு, கூனூர் ஸ்ரீமாந் என். இராமசாமி பிள்ளையவர்கள், 'அறிவுநெறி' என்னும் இந்நூலைத் திட்பநுட்பஞ் செறிந்த நூற்றிரண்டு வெண்பாக்களால் யாத்து அச்சியற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இந்நான்முகத்துள்ள பல அறிஞர்களின் சிறப்புக்கவிகளால் இந் நூற்பெருமை யினிது விளங்கும்.

[இங்கு மதிப்புரை வரையப்பெற்றுள்ள நூற்பிரதிகளுள் ஒவ்வொன்றுஎமக்கு இலவசமா யனுப்பி யுதவிய பெரியார்கட்கு எமது மனமார்ந்த நன்றி வழங்குகின்றோம். ப—ர்.]

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன்திருவடிவாழ்க.

ஸ்ரீமத் அருணந்திசிவாசாரியசுவாமிகள் அருளிய

# இருபாவிருபஃது.

இது

திருநெல்வேலிப்பேட்டை
ஸ்ரீ மெய்கண்டான் நிலைய தரும கருத்தரும்,
திருவருட்பயன், கோடிக்கவி, போற்றிப் பஃறொடை, வினா வெண்பா
என்னும் நூல்களின் உரையாசிரியரும்,
ஆசிரியபதவியி லிருப்பவருமாகிய

## ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள்

செய்த

பதவுரை கருத்துரைகள் சேர்ந்தது.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலை

பவ௵ ஆனி௴
1934

186941

N. B. உரைப்பகுதியின் பதிப்புரிமை உரையாசிரியருக்கே யுள்ளது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

சித்தாந்த சைவச் செந்நெறிகளை அளவைநூன் முறைப்படி ஆராய்ந்து தெளிவுற விளக்கும் சிவஞானபோதம் முதலிய செந்தமிழ் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய இருபாவிருபஃது என்னும் இந்நூல், ஸ்ரீமெய்கண்ட தேவர் மாணவர்குழாங்களுண் முதன்மையான ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்றது. வெண்பா ஆசிரியப்பா என்னும் இருவகைப்பாக்களாலும் அந்தாதித் தொடையால் யாக்கப்பெற்றிருத்தலால் இஃது இப்பெயர் எய்திற்று. மெய்கண்டதேவரைத் துதிக்குமுகத்தால் சித்தாந்த உண்மைகளையும், ஸ்ரீ அருணந்திசிவத்தின் சிவாநுபவத்தையும் அங்கை நெல்லியெனச் சங்கையற விளக்குந் தகைசான்றது. மூவகை யான்மவர்க்கத்துள், விஞ்ஞானகலர்க்கு உள்ளத்துணர்வாயொளிர்ந்தும், பிரளயாகலர்க்கு மூர்த்திவடிவாய் முன்னின்றும், சகலான்மாக்களுக்கு 'அருபரத்தொருவன் அவனியில் வந்து, குருபரனாகி யருளிய பெருமையைச், சிறுமையென்றிகழாதே' என்ற மணிவாசகத்திற்கிணங்க, மானைக்காட்டி மான்பிடிக்கும் வேட்டுவர் போல,

"சோதி மணிமிடற்றிற் சுந்தரமும்—பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும்—அச்சமற
ஆடு மரவும் அழகார் திருநுதன்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணும்—கேடிலயம்
கூட்டுந் தமருகமும் கோல எரியழலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும்—வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுந்தா ளிணுமடியா
ருள்ளத் தினும்பிரியா வொண்சிலம்பும்—கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்
ஒன்றுமுருத் தோன்றாம லுள்ளடக்கி—என்றும்
இறவாத இன்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து—நறவாரும்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து—பாரோர்தம்

உண்டி உறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி!"

என்றுபோற்றிப்பஃறொடையில் வகுத்தவாறே அவ்வான்மாக்கள் கொண்ட மானிடவடிவந்தாங்கி ஆசாரிய மூர்த்தியா யெழுந்தருளியும், மெய்யுணர்வளித்து அவ்வான்மாக்களை ஆட்கொண்டருளும் முறைமைப்படி, இந்நூல் இறைவனையும் ஆசிரியனையும் அபேதநிலையில் வைத்துப் பதிபசுபாசம் ஆகிய முப்பொருளியல்களைக் கடாவிடைகளால் விளக்கிச் செல்லும் விழுப்பமுடையது. புறச்சமயத்தாரின் போதனைக் கிணங்காது, சிவபிரானே ஆசாரியத்திருமேனி தாங்கிவந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கிறார் என்னும் உண்மைகண்டு, பொருணிச்சயங்கொண்டு, சாதனநெறியிலொழுகி நிட்டை கூடிச் சிவானந்தப் பெரும்பேறு பெறுதற்குச் சிறந்த துணையாய் விளங்குவது இந்நூலாகும்.

இவ்வறிவு நூற்குத் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீநமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் செய்த உரையொன்று முன்னர் வெளிவந்திருக்கிறது. அவ்வுரை படிப்பார்க்கு நூற்பொருளைச் செப்பமுற விளக்கும் திறனின்றிப் பதிக்கப்பெற்றிருத்தலால், திருநெல்வேலி சைவத்திருவாளர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் இந்நூலுக்குப் பதவுரை பொழிப்புரை யெழுதிச் 'சிவநேசன்' பத்திரிகையுடனிணைத்து வெளியிடலானார்கள். இவ்வுரை செய்யுட்களின் தொடர்மொழிகளை அநுவயித்துப் பதப்பிரிவுசெய்து பொருளுரைத்தும், முடிக்குஞ் சொல், இயைபுமொழி, சொல்லெச்சம், குறிப்பெச்சம் முதலியவைகளை விரித்துரைத்தும், பொருள்களை ஒருநெறிப்படக் கொண்டுகூட்டியும், இன்றியமையா இலக்கணக்குறிப்புக்கள் வரைந்தும், இளைஞரும் பயின்று பொருளுணர்ந்து பயனடையத் தக்க பான்மையுடையதாய்ப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது.

இவ்வாறே மற்றைய சித்தாந்த சாத்திரங்களின் உரைகளையும் திருந்திய முறையில் பதிப்பித்து வெளியிடின், சைவசித்தாந்த உண்மைகளை யாவரும் எளிதிலறிந்து இன்புறுதற்கு ஏற்றதுணையாகும் என்பது எமது கருத்து.

இதனைத் தமது 'சிவநேசன்' பத்திரிகையுடனிணைத்து வெளியிட்டு யாவருக்கும் பயனுறச்செய்த பத்திராதிபர் திரு. ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்அவர்களின் பேருதவி யாவரும்போற்றத்தகும் பெற்றியுடையதாகும்.

பலவான்குடி } உ. ரா. சுவாமிநாதன்,
பவ—ஆனி—௨௪௳ } 'சிவநேசன்' துணையாசிரியன்.



பேதாபேதமாவது பழமுஞ்சுவையும் சேர்ந்தாற் போன்ற தாதான்மியம்.

சிவபிரான் ஆசாரியமூர்த்தியாக வந்து செய்யும் அநுக்கிரகத்தினாலே பக்குவான்மா தனக்குப் பகையாகிய பிரபஞ்சத்தை யொதுக்கி உறவாகிய அவனோடு கலக்கும். அவன் தனது எண்குணங்களையும் அதன்மாட்டுப் பதியவைத்து, அதன் குணத்தை யெல்லாம் அவ்வெண்குணத்து ளகப்படுத்தி யடக்குவான். அவ் விதமாக ஆன்மாவின்மாட்டுச் சிவ பிரானது எண்குணங்களும் விளங்குவதே முத்தி அல்லது பேரின்ப மெனப்படும். அவ்வான்மா தானுஞ் சிவமேயாய் அவனோடு ஒற்றித்து நின்று அவ்வெண்குணங்களையும் அழுந்தி யறியும். அவ்வாறழுந்தி யறிவதே பேரின்பநுகர்ச்சி யெனப்படும்.

முத்தியில் ஆன்மா சிவமேயாயினுஞ் சிவபிரானுக்குரிய பஞ்சகிருத்தியத்தைமட்டும் அது செய்வதில்லை. ஆகலின், ஆண்டும் ஆன்மா அடிமையே; சிவபிரானே ஆண்டவன்.

திருச்சிற்றம்பலம்.

---

இருபா விருபஃது உரையுடன் முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்ட சிவந் திருவடி வாழ்க.
ஸ்ரீ அருணந்திசிவந் திருவடிவாழ்க.

புனல்தரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.

300. மருப்புத் தலைச்சே வுடைமுது குன்றர் மணிவரையில்
விருப்புற் றலைநீர் படிந்திடு காலை விழுமடுவிற்
றரிப்பற்ற நின்மகட் கண்டோர் பெருந்திறற் றண்ணளியான்
பொருப்புத் தலையார் புயத்தணைத் தேகரை போந்தனனே. ()

களிறுதரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.

301. வாளைத் தடஞ்சேர் பெறுமுது குன்றர் வரைப்பொழில்வாய்
ஆளைப் பொருது மழைமத யானை யடர்ந்துவர
வேளைப் பொருவுறு மோரெழிற் காளைகை வேலொடுறத்
தோளைத் தழுவிப் பயந்தீர்ந் தனனின் சுடர்த்தொடியே.(௧௫)

பிறர் மணம் விலக்கல்.

302. பைங்கேழ்ப் புரவி யினன்றூழ் முதுகுன்றர் பார்வரைக்கண்
தங்கூழ் கொணர்ந்து பொருத்துந் தடம்புயன் றானொருவன்
செங்கேழ் மணிவடஞ் சூட்டினன் போகநின் சேயிழையாள்
பொங்கேழ் மதிமுகத் தாயே பிறர்க்குப் பொருந்திலளே.(௧௬)

தலைமகள் வேற்றுமை கண்டு
நற்றாய் செவிலியை வினாதல்.

303. மடைவைக்குஞ் சங்கு மணியீன் முதுகுன்றர் மால்வரைநீள்
தொடைவைக்குங்கூந்தலள் கொங்கைப்பசப்புந் துணைவிழிகள்
இடைவைக்கு நீருமுற் றாணை யிழந்திங் கிருந்ததென்னோ
படைவைக்கு நீள்விழி மாதே யயிர்ப்பறப் பன்னுதியே. (௧௭)

செவிலி நற்றாய்க்கு அறத்தோடு நிற்றல்.

304. தேவிக் கருளுந் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
வாவிக் கலையொன்று வந்ததுண் டோவென வான்புனத்தின்
மேவிக் குழன்முடி சேர்முன மோகம் விளங்கிழையைக்
காவிக் கிகலும் விழியா யொருவன் கலந்தனனே. (௧௮)

---

300. சே உடை - இடபவாகனத்தையுடைய.

302. மணிவடம் - முத்துமாலை; "ஊசி முனையினின்று, வண்டவஞ் செய்திங்கு வந்தகண் டீரிம் மணிவடமே"(வெங்கைக்கோவை,101.) எழ் - எழுச்சி; "எழ்ச்சியு மிறுதியுஞ் சூழ்ச்சியு முணர" பெருங். ௧: 58: 58.

304. குழன்முடி சேர்முனம்: "முருகு தலைச்சென்ற கூழை முடியா" சிந். 104.

நற்றாய் தமருக்கு அறத்தோடு நிற்றல்.

305. கருஞ்சேற் றகல்வயல் சூழ்முது குன்றர் கவின்சிலம்பில்
இருஞ்சே லுறழ்விழி நம்மட மாதையொ ரேந்த லுக்கிங்
கருஞ்சார்பு செய்குவம் வில்லார் விலையி லவிர்மணியைத்
தெரிஞ்சோர் பசும்பொனில் வைத்திழைத் தாங்குத் திகழ்ந்திடவே.()

## உக. உடன் போக்கு.

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்.

306. தேங்கும் புனற்சடை சேர்முது குன்றர் சிலம்பணங்கை
வீங்கு மிருளிடை யுன்னூர்க் குடன்கொண்டு மேவலன்றி
ஓங்கு முமக்கு வழிவே றிலையெம ருற்றுமன்று
தாங்குந் தரணி முலைவிலை யாக்கினுந் தந்திலரே. (க)

தலைவன் உடன்போக்கு மறுத்தல்.

307. புலத்தகம் போகா தருண்முது குன்றர்தம் பூஞ்சிலம்பில்
அலத்தகஞ் சேர்ப்பினு மஞ்சு மடிமல ராயிழையைச்
சொலத்தக வல்ல கொடும்பாலை யார்வழி தோய்ந்தனல்சேர்
நிலத்தக மெவ்வித நான்கொடு போவது நேரிழையே. (உ)

பாங்கி தலைமகனை உடன்படுத்தல்.

308. கனங்கொள் பொழில்சூழ் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
சினங்கொண் டவிர்கழை விற்பூட்டி யெய்த திருமலராம்
அனங்கன் கணையினு மன்னையர் சொல்லினு மன்பினர்போம்
வனங்கள் கொடியன வோசொல்லு வாய்புகழ் மன்னவனே.()

தலைவன் போக்கு உடன்படுதல்.

309. விண்ணிற் கரிய திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
கண்ணிற் குரிய வமுதனை யாடன் கடிமலர்க்கால்
புண்ணிற் குரியதன் றுக்கி யமளி பொருந்தலைப்போற்
பண்ணற் குரியவன் மாதே சுரமயிற் பண்ணவனே. (௪)

306. உமக்கு என்றான் தலைவியையும் உளப்படுத்தி. உன்னால் தாங்கப் பட்ட தரணியை.

307. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு; அலத்தகம் சேர்ப்பினும் அஞ்சும் அடி: "அரக்கார்ந்த, பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையென, அஞ் சிப்பின் வாங்கு மடி" நாலடி. 396.

308. கனம் கொள் - மேகத்தைக் கொண்ட. அனங்கன் - மன்மதன்.

309. விண்ணிற்கு - தேவர்களுக்கு; ஆகுபெயர். சுரத்தைப் பண்ணற் குரியவன். அயிற் பண்ணவன் - வேலையுடைய முருகக்கடவுள்.



பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

310. காவன்ன பூம்பொழில் சூழ்முது குன்றர் கவின்சிலம்பா
பூவன்ன சீறடி கூர்ம்பரல் தாக்கப் பொறுப்பதெங்ஙன்
மாவன்ன பூங்கொடிக் கென்றுரைநந் தார்மிக வார்நுதிசேர்
ஏவன்ன கூர்விழி யாயவ ரெண்ண மியம்பரிதே. (௫)

தலைவி நாணழிபிரங்கல்.

311. காணிற் கதியரு ணன்முது குன்றர் கவின்சிலம்பிற்
பூணிற் பொலியும் புணர்முலை யாயிப் புவியிடத்திற்
கோணிக் கவின்பெறு நன்னுதல் சேர்ந்திடு கோதையர்க்கு
நாணிற் சிறந்தது போல்வே றுளதோ நவின்றிடினே. (௬)

கற்பு மேம்பாடு பாங்கி கூறல்.

312. கற்புக் கருந்தவஞ் செய்முனி வோருங் கருதரிய
எற்புக் கறிவருங் காமுது குன்ற ரெழிற்சிலம்பிற்
பொற்புக் கிணையறு நன்மட வார்கள் பொருந்துயிர்க்குக்
கற்புக் கிணையுறு மோர்துணை யுண்டோ கனங்குழையே. (௭)

தலைவி ஒருப்பட்டெழுதல்.

313. போராரும் வேலர் பிதாமுது குன்றர் பொருப்பிடைநாம்
ஏராருந் தோள ருடனே பொருந்தியங் கேகியபின்
காராரு மென்குழ லாரலர்ச் சொற்கள் கழறினுமென்
ஊரார்வாய் மூட வுலைமூடி யுண்டோ வொளியிழையே. (௮)

பாங்கி சுரத்தியலுரைத்துழித் தலைமகள் சொல்லல்.

314. பாட்டிற் குரிய வெழிற்சுந் தரற்குப் பரவையினைக்
கூட்டி யருளுந் திருமுது குன்றர் குளிர்சிலம்பில்
தோட்டிற் குரிய வளைக்காதி னேற்கனை சொல்கடியும்
வீட்டிற் கொடியது வோமன்ன னேடுசெல் வெஞ்சுரமே. (௯)

310. கா - கற்பகச்சோலையை. மா - திருமகள்.

312. கல் புக்கு - மலைக்குகையில் புகுந்து. எல் - சூரியன். எல் புக்கு அறிவரும் கா: "வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" (பெரும் பாண். 374.) பொற்புக்கு - அழகுக்கு.

313. ஊரார்வாய் மூட உலைமூடி உண்டோ?: "ஊரைவாய் மூட வுலை மூடி தானிலையே" பொய்யாமொழியார்.

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்.

315. துளிக்கு மதுமழை பெய்கா முதுகுன்றர் தொல்வரையாய்
களிக்கு மனைக்கிவ ளல்லாது வேறிலை காரிகையார்
அளிக்கு மலர்த்தா ரிவள்கருங் கூந்த லவிர்மதிபோல்
வெளுக்கும் பருவத்து மன்புட னேநீ விரும்புவையே. (௧௦)

பாங்கி வைகிருள் விடுத்தல்.

316. சேயேனந் தேடிடு நம்முது குன்றர் சிலம்பனைக்குத்
தாயே யிரங்கா யெனச்சொல்லி மாதே தணிவுசெய்து
யாயேதுஞ் சொல்லா திவ் வூரடக் கிப்பின்னர் யான்வருவேன்
நீயேது நெஞ்சி னினையாம லன்பர்பின் னேயகலே. (௧௧)

தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்.

317. அறிவில் விளங்கிய மாமுது குன்ற ரணிவரைமேற்
பொறியில் விளங்கிய வேருடை யாய்நின் பொருந்தியசெம்
முறியில் விளங்கிய மெல்லடி நோவ முதுக்குறைவில்
சிறிய துளங்கவ றீர்ந்திட மெல்லெனச் சென்றருளே. (௧௨)

பொழில் கண்டு வியத்தல்.

318. வெங்கோ லரசன் புரியுங் கொடுமையை வேறொருபாற்
செங்கோ லரச னழிக்குந் திறம்போற் றிருந்திழையாய்
நங்கோலம் வாட்டுங் கொடுஞ்சுரத் தீமையை நாமகலச்
செங்கே ழலர்க்கா முதுகுன்றர் வெற்பிடைச் சேர்ந்தனமே. ()

தலைமகன் தலைமக ளசைவறிந் திருத்தல்.

319. அந்திச்செவ் வானன்ன நம்முது குன்ற ரடங்கலரூர்
சிந்திக் கெடவடு தீப்போற் கொடிய செறிவனத்தின்
வந்துற்ற நோயை யகற்றிடப் பூங்கா மலரமளி
சந்திச் சடிகண் மகிழ விரும்பொழில் சார்குவமே. (௧௪)

---

315, நரைமயிர்க்கு மதி உவமை: "சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரும்" பரிபாடல், ப. 167: 43.

317. பொறி - திருமகள். முறி - தளிர். முதுக்குறைவு இல் - பேரறிவு இல்லாத. கவல் தீர்ந்திட.

319. அந்திச் செவ்வா னன்ன முதுகுன்றர்: "செவ்வா னன்ன மேனி" (அகநா. கடவுள்.) பாலைக்கு முப்புரத்தை எரித்த தீ உவமை கூறப்படுதல், கலி. 2: 1-8 அடிகளாலும் விளங்கும்.



தலைமகன் தலைமகளை
உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்..

320. மெய்க்குப் பொருந்தும் பணிபூண் முதுகுன்றர் மென்சிலம்பிற்
பொய்க்குப் பொருந்துஞ் சிறுநுசுப் பாயுன் புகல்குழற்கு
நெய்க்குப் பொருந்து நறுமலர் சேர்த்தி நிகழ்ந்திடுமென்
கைக்குப்பொருந்துந்தவம்போலச்செய்ததைக்கண்டிலனே. ()

கண்டோர் அயிர்த்தல்.

321. ஆடுங் கொடிமுது குன்றர்தம் வெற்பி லமர்ந்தவரோ
பாடும் புகழுறு பண்ணவ ரோவிவர் பார்க்குறுமெய்
வாடும் பரிசு மிகவும் வருந்திட வந்தவர்கள்
நாடும் படியயிர்ப் போடே பொருந்திட நண்ணினரே. (௧௬)

கண்டோர் காதலின் விலக்கல்.

322. இரதி யொடும்வரும் வேளனை யாயின னிப்பகற்றன்
புரவி தனையும் வருத்திடு மாதவம் போக்கிமுந்நீர்
விரவி யிருளுமுன் னெம்மூரின் மேவி விடியலிலே
அரவு பணிமுது குன்றர்தந் நாட்டை யடைகுவையே. (௧௭)

கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

323. வேலைக் கடந்த திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
காளைப் பருவ முடையமன் னுநின் கடிநகரை
வாளைப் பொருவும் விழியாளு நீயு மகிழ்ந்தடைவீர்
நாளைப் பகலிச் சிறுகுன்றை நீங்கி நடந்திடினே. (௧௮)

தலைவன் தன்பதி அடைந்தமை
தலைவிக்கு உணர்த்தல்.

324. திருத்துங் குழல்கள் சரியக் கயிற்புறஞ் சிற்றிடையைப்
பொருத்தும் புணர்முலை வாட்டமுந் தாங்கிப் புகுவனச்சி

---

320. மெய்க்கு - திருமேனியில்; உருபுமயக்கம். பணி - பாம்புகளை. நெய் - தேன்; நெய்யரி யென்னும் பெயர்க்காரணம் இங்கே அறிதற்பாலது.

321. பாடும் பண்ணவர் - இசைபாடும் கின்னரர். வருந்திடவும் பொருந்திடவும் நண்ணினர்.

பி - ம். 'வந்தவரை'

322. ஆதவம் - வெயில். அரவு: பதஞ்சலிமுனிவர்.

323. காளைப்பருவம் - பதினாறு பிராயமுள்ள பருவம்; தக்க. 5, உரையைப் பார்க்க.

இருந்தப்பொழுதுமிடர்கொடுங்கேடன்றெய்த்தபொன்னே
வருத்தந் தணிநீ முதுகுன்ற மாநகர் வந்தனமே. (கக)

---

## உஉ. கற்பொடு புணர்ந்த கௌவை.

செவிலி பாங்கியை வினுதல்.

325. விண்ணைக் கடந்த புகழ்முது குன்றர் வியன்சிலம்பிற்
கண்ணைக் கடந்து மணிபோன தென்னக் கனங்குழையாய்
பண்ணைக் கடந்த மொழிமக ளெங்குப் படர்ந்தனளால்
எண்ணைக் கடந்த திரட்பாங் கியர்க ளிடருறவே. (க)

பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்.

326. அலர்கூ றியமொழி நம்மவர் கேட்டு மடைந்தவர்க்குப்
பலர்கூடி நன்மணஞ் செய்யா தொறுத்த பரிசுகண்டு
மலர்கூறு கொள்குழ லுன்மக ளென்பர் வழியடைந்தாள்
கலர்கூ றினுஞ்சுத்த மாக்கு முதுகுன்றர் கார்வரையே. (உ)

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு
எதிரழிந்து மொழிதல்.

327. அஞ்சத் தவன்பணி மாமுது குன்ற ரணிவரைமேற்
கஞ்சத் திருவுற மென்மகள் பாலையிற் காந்தனுடன்
வஞ்சித் தலர்மொழி யான்கேட்கப் போன மனத்துயர்க்குத்
துஞ்சத் துணிகுவ தல்லாற் பிறிதொரு சூழ்ச்சியின்றே. (ந)

செவிலி தன்னறிவின்மை தன்னைநொந்துரைத்தல்.

328. குலவும் விடைமுது குன்றர்தம் வெற்பிலென் கொம்பனையாள்
இலகும் புகழ்நள னின்னே தமயந்தி யேந்துறுகான்
விலகும் படியன்றிச் சென்றதை யில்லுறு மெல்லியலார்க்
குலகம் பழுது சொலுமோவென் றுளதை யோர்ந்திலனே. ()

---

324. குழல்களென்று பன்மையாகச் சொன்னது ஐம்பாலென்பது பற்றி; "கடை குழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164) என்பதையும் அதன் உரையையும் பார்க்க. குழல்கள் கயிற்புறம் சரிய; கயில் - பிடரி. எய்த்த - இளைத்த.

325. கண்மணி தலைவிக்கு உவமை; "மணிவாழ் பாவை நடைகற் றன்னவென், அணியியற் குறுமக ளாடிய, மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே" நற். 184.

326. கலர் - கீழ்மக்கள்.

327. கஞ்சம் - தாமரைமலர். துயர்க்கு - துன்பம் நீங்குவதற்கு.
பி - ம். 'பிறவொரு சூழ்ச்சி.' 'துஞ்சத் துணிகுவது'



செவிலி தெய்வம் வாழ்த்தல்.

329. தேவர்க் கரியர் திருமுது குன்றர் சிலம்புறையும்
காவற் குரிய விருந்தெய்வ மேயென் கருங்குழற்கு
மேவற் கரிய தழற்பாலைத் துன்பம் விலக்கியில்லில்
ஆவற் பெருக வரப்பண்ணி னுன்றொழும் பாகுவமே. (ரு)

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்.

330. துள்ளி யெழுமான் கரமுது குன்றர் சுடர்க்கிரியில்
வள்ளி யறுமுகன் பின்போன தென்ன மடந்தைநல்லாய்
கள்ளி யடரு மழற்கான் வழியிற் கணவனுடன்
வெள்ளி யெழுமுனஞ் சென்றா ளுனது வியன்மகளே. (சா)

நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பல்.

331. திணியுற்ற வங்கம் புனைவோர் முதுகுன்றிற் செய்யசிந்தா
மணிபெற் றிழந்தவர் போல்யான் பெரிது மனமறுக
அணிபெற்ற கொங்கை யெனதா ருயிரை யடவிசெல்லத்
துணிவுற் றகற்றிய பின்சொல்லி னென்பயன் சூழ்கொடியே. ()

நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பல்.

332. மாதே யனையுங் கழங்கா டிடமு மலர்பறிக்கும்
தாதே சொரியுஞ் செழுங்காவு நோக்கித் தளர்வுறனீ
போதே யனைய வடிபா ருக்கப் பொறுத்ததெங்ஙன்
றீதேது மில்லாச் சிவன்முது குன்றினஞ் சேயிழைக்கே. (அ)

அது கேட்ட தோழியழுங்கல் கண்டு நற்றாய் புலம்பல்.

333. பொன்கண் ணனைய திருமுது குன்றர் பொருப்பிடத்திற்
றன்கண் ணனைய மடவீர் புலம்பத் தனித்தெனைவிட்
டென்கண் ணனைய வெழின்மா தொருதிற லேந்தலின்பின்
வன்கண் ணனையவர் போலே கியதுயர் மாற்றரிதே. (கூ)

---

331. அங்கம் - எலும்பை. மணிபெற்றிழந்தவர்போல் யான் மனமறுக: "அரும்பெறன் மாமணி, ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று" (மணி 2: 72 - 3.) அடவி - சுரம்.

332. மாதே யென்றது பாங்கியை. போதே அனைய - மலரை ஒத்த.

333. பொன் - திருமகள். தன் என்றது தலைவியை. வன்கண் அனையவர் போல்.

நற்றாய் அயலவர்தம்மோடு புலம்பல்.

334. கற்றோர் பரவுந் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
பெற்றோ லவர்பழி செய்யா மகளிர்தம் பேறுநன்றால்
உற்றோ லவர்பிறப் பீன்றோர் கிளைஞரென் றோதினர்கட்
கெற்றாற் குறையுண் டிகபர மென்னு மிரண்டினுமே. (௧௦)

நற்றாய் தலைமகள் பயிலிடந்தம்மொடு புலம்பல்.

335. அளிசே ரிதழி யணிமுது குன்ற ரவிர்சிலம்பிற்
றெளிசேர் சுனையே மலர்ப்பொழி லேசெய் சிறுமனையே
ஒளிசே ரிழைமுலை யென்மக டன்பதி யோடுசெல்காற்
களிசேர் மொழியெனக் கென்சொல்லிப் போயினள் கானகத்தே. (௧௧)

தெய்வம் போற்றல்.

336. அங்க மனலெனக் கொண்முது குன்ற ரவிர்சிலம்பிற்
றங்கம் புரைநிறத் தென்மக ளில்லிற் றனிவரவே
சிங்கத் திரியும் வனமார் கொடியெனுஞ் சிதெய்வமே
பொங்கு முனதருள் செய்தாற் புரிகுவம் பூசைகளே. (௧௨)

நற்றாய் சுரந்தணிவித்தல்.

337. பணியுற்ற மெய்யர் திருமுது குன்றிற் பரவுறுநன்
மணிமுத்த மாநதி யாயுறு மெங்கண் மகளினுக்குத்
திணியுற்ற தோளுடைக் காந்தனைக் கூடிச் செலுஞ்சுரந்தான்
தணியுற்று வெம்மை பரன்மல ராகித் தயங்குகவே. (௧௩)

நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

338. பொன்னாற் கரிய பதமுது குன்றார் பொருப்பிடையென்
மின்னாற் றிகழிடை மெல்லியல் பூவடி மேதகுபால்
அன்னச் சிறகி னணைமே லிருக்கினு மஞ்சவதாம்
உன்னாற் கரிய கடுந்தீச் சுரத்தெங்ங னுற்றனவே. (௧௪)

334. அலர் பழி செய்யா - பரவுகின்ற பழிமொழியைச் செய்யாத. உற்றால் அவர் பிறப்பு - அத்தகையவர் பிறந்தால்.

335. அளிசேர் இதழி - வண்டுகள்சேர்ந்த கொன்றைப்பூவை; இறைவன் அருளால் அளிசேர்ந்தது; "வண்டுமொய்த் தரற்றும் பிண்டி" (சீவக. 271) என்பதனையும் அதனுரையையும் பார்க்க. பதி - தலைவன்.

336. தங்கம் புரை திறம்: "பொன்னேர் மேனி" (குறுந். 319.) வனமார் கொடியெனும் சிதெய்வம் - வன துர்க்கை; சி - ஸ்ரீ.

337. பணி - பாம்பு. வெம்மைதணியுற்று - வெப்பம்தணிதலுற்று. பரல் - பருக்கைக்கல். சுரம் மணிமுத்த மாநதியாயுறும்; பரல் மலராகித் தயங்கும்.

18694

# செய்தித்திரட்டு.

ஒன்பதாவது தென்னிந்திய வீரசைவ சித்தாந்த மகாசங்கம்:—இம் மகாசங்கம், 28,29—5—1934 இவ்விருதினங்களிலும் புதுச்சேரியையடுத்த பொம்மபுரம் பெரியமடத்தின்கண் ஸ்ரீமத் ஞான ராஜதானியான இனும் பொம்மையபாளையம் திருக்கைலாயபரம்பரைபெரியமடம் சிவகஞ்சி மயூராசலநிவாச யதீஸ்வரகர்த்தரான மயிலந் தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இனும்தார் ஸ்ரீமத் சிவஞானபாலையசுவாமிகள் மகாசந்நிதானம் தலைமைவகித்து நடாத்தியருளக் கீழ்க்கண்டவாறு இனிது நிறைவேறிற்று.

28—5—34. காலை 9 மணிக்குக் கடவுள்வாழ்த்துடன் வரவேற்பு முதலிய நடந்தவுடன் வீரசைவசித்தாந்தக் கருத்தடக்கிய தலைவர் முன்னுரை மகோபந்நியாசம் நடைபெற்றது. மதுராந்தகம் திரு. சுப்பிரமணிய குருக்களவர்களால் 'தீக்ஷையே மோக்ஷ சாதனம்' என்பதும், மாலை 3 மணிக்கு ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை யவர்களால் 'சிவப்பிரகாச சுவாமிகள் கவிநயம்' என்பதும் சொற்பொழிவாற்றப்பெற்ற பின்னர், கொள்ளேகாலம் ராவ் சாஹேப் ஜி. பி. மல்லப்பா அவர்கள் புதல்வர் பாலகந்தருவ ஜி. எம். நடராஜய்யர் அவர்கள் சங்கீதக்கச்சேரி நடைபெற முதல்நாட் கூட்டம் இனிது நிறைவுற்றது.

29—5—34 காலை 9 மணிக்கு மீண்டும் கடவுள்வாழ்த்துடன் சபை தொடங்கப்பெற்றது. வளவனூர் திரு. சக்கரபாணிப் பிள்ளை யவர்களால் 'மூவர்பெருமை' என்பதும், மேலூர் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. வீ. குமாரசாமி ஐயரவர்களால் 'திருவாதவூரடிகள் திருமொழி' என்பதும், அண்ணாமலைப்பல்கலைக்கழகம் திரு. வீ. சோமசுந்தரய்யரவர்களால் 'இரேணுக விஜயம்' என்பதும், திரு. பி. கல்யாணவீரய்யரவர்களால் 'கொக்கி தேவர்' என்பதும் விரிவுரை யாற்றப்பெற்றன.

மீண்டும் மாலை 3 மணிக்குச் சபைதொடங்கப்பெற்றது. திருத்தலையூர் திரு. மாணிக்கப் பிள்ளையவர்களால் 'கல்வி' என்பதும், சென்னை மகம்மதியர் காலேஜ் விரிவுரையாளர் திரு. அ. கந்தசாமிபிள்ளையவர்களால் 'மூவர் தமிழ்' என்பதும், முசிறி போர்டு ஐஸ்கூல் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. குமாரவீரய்யரவர்களால் 'எந்திதன் அன்பும் எந்தைதன் அருளும்' என்பதும், வெண்பாவூர் திரு. எஸ். துரைசாமி ஐயரவர்களால் 'சிவஞானபாலைய சுவாமிகள் செயற்கருஞ் செயல்' என்பதும், ஆசிரி
திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை யவர்களால் 'வீடுபேற்றின் மூன்று மா
கள்' என்பதும் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ச் சொற்பொழி
பின்னர், தலைமைவகித்த சுவாமிகள் ஒவ்வொரு சொற்பொழி
தையும் பல அரிய பிரமாணங்களைக் கொண்டு விளக்கிக்காட்
நோக்கத்தையும், வீரசைவ சமயத்தின் உண்மையி
சமூகத்தார் மேற்கொள்ளவேண்டிய கடமைகளையும்
ப்புரை மகோபந்நியாசம் புரிந்தார்கள். ஆசிரியர்
ளையவர்கள் சுவாமிகளுக்குக் கவிமாலை சூட்டி
வீரையரவர்கள் தலைமைவகித்த சுவாமிகட்
துவழிபாடியற்றியும், புலவர்கட்கு நன்றி
கூற சபை இனிது நடைபெற்றது.
டைமடாலயத்தின் செல்விலேயே
பெருங்கருணை மிகப்பாராட்ட

OFFICE OF THE ... 18 JUL 1934

கோலா[illegible] ஐக்கிய மலாய் நாட்டு நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கத்தின் 1933-ஆம் வருடாந்தர அறிக்கையும், சங்கத்தின் மூன்றுவதாண்டு நிறைவுவிழாப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி விவரமும் வரப்பெற்றேம். மலாய்நாடுகளில் தொழில் செய்யும் நகரத்தார்களின் ஆக்கத்[illegible] உள்ள இச்சங்கம் கடந்தமூன்றுண்டுகளாக ஆற்றியதொண்டுகளும், வரவுசெலவுகணக்கும், பிறவும் அறிக்கையால் நன்கு அறியக்கிடக்கின்றன. போதிய மூலதனமும், நிறைந்த அங்கத்தினர்களும் கொண்டுள்ள இச்சங்கம் வட்டித்தொழில், ரப்பர் முதலிய வர்த்தகத் துறைகளில் அவ்வப்போது வேண்டும் சௌகரியங்களை நம்மனோர்க்குச் செய்வதில் பெருந் துணையா யிருப்பதுடன், அரசியலாரிடம் நமது குறைபாடுகளை எடுத்துக்கூறி அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் அநுகூலமாயிருக்கிறது. ஐக்கிய மலாய் நாடுகளிலுள்ள பல கிளைச் சங்கங்களுக்கும் தலைச் சங்கமாகிய இதனது பெருந் தொண்டு வளர் பிறைபோல் நாளுளும் பெருகுந் திறன் பலராலும் நன்கு மதிக்கப் பெறுதல் கண்டு பேருவகை யெய்துகின்றேம். அறிக்கையுடன் அரசியல் விடுமுறை நாட்கள், இரங்கூன், செய்கோன், சிங்கப்பூர், பினங்கு ஆகிய விடங்களின் நடப்புவட்டி, தவணை வட்டி விவரமும், கொழும்பு சென்னை ஆகிய இடங்களின் நடப்பு வட்டி விவரமும், மலாய் நாட்டிலிருந்து இந்தியத் துறைமுகங்கட்கும், இந்தியாவிலிருந்து மலாய் நாட்டுத் துறைமுகங்கட்கும் பிரயாணக் கட்டண விவரமும் இணைக்கப் பெற்றிருத்தல் மிகுந்த உபயோகமாம்.

தேவகோட்டை:—திருவாளர் ராம. அரு. அரு. ராம. அருணசலம் செட்டியாரவர்களின் குமாரர் அருணசலம் செட்டியார், ஆனி உடுவை திருக்குற்றாலத்தில் தமது முப்பத்திரண்டாம் வயதில் சிவபதம் அடைந்தனர். கல்வியறிவு ஒழுக்கங்களினுலும், காரியநிர்வாகத்திறமையினுலும், சிவபக்தி முதலிய சீர்மையினுலும், ஐம்பெருங் குரவருள் முதன்மையாயுள்ள தந்தையாரிடத்துப் பணிவுடைமையாலும் சிறந்துவிளங்கிய இம் மெய்யன்பர் இளம்பிராயத்தில் இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்றது பெரிதும் வருந்தற் பாலதே. சிவச் செயலெனக் கொண்டே இவரது தந்தையார் மனந் தேறுதலடைவாராக!

கொழும்பு:—இலங்கை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கத்தின் மூன்றுவது அறிக்கை வரப்பெற்றேம். இச்சங்கம் செட்டியார்களின் நலன் குறித்தும், இலங்கையின் அபிவிருத்திகுறித்தும் இயன்ற தொண்டு இயற்றிவருவதாகக் காணப்படுகிறது. இவ் அறிக்கையால் இச் சங்கத்தின் போஷகர், அக்கிராசனர், அங்கத்தினர் முதலியவர்கள் இன்னின்ன ரென்பதும், சங்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகளும், வரவு செலவு கணக்குகளும், பிறவும் நன்கு விளங்குவதாகும். இதன் [illegible]ழ்ச்சிகளை உய்த்துணரும்போது இச்சங்கம் காலக்கிரமத்தில் செட்டியார் சமூ[illegible]க்கு இலங்கை வாழ்க்கையில் அவ்வப்போது வேண்டப்படும் எல்லா வசதிக[illegible]டாக்கும் ஏற்ற முடையதாகும் என நம்புகிறேம்.

---

334. அ[illegible]
ருல் அவர் பிற[illegible]

335. அளிசேர்வநேசன்" ஆண்டுத்தோகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| அருளால் அளிசேர்ந்த | 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| என்பதனையும் அதனுரை | [illegible]-0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

336. தங்கம் புரை நிறம்: [illegible]தி அணு 0—3—0
கொடியெனும் சீதெய்வம் - வன[illegible]ர விகிதம்.

337. பணி - பாம்பு. வெம்மைதண[illegible]1-க்கு ரூ 4—0—0
பருக்கைக்கல். சுரம் மணி[illegible] மாநதி[illegible]க்கு ரூ 8—0—0

[illegible]ல், பத்திராதிபர்
[illegible]ியிடப்பெற்றது.

32
8821,N295
N349
186941